

நீங்கள் எங்கிருந்தாலும் நம்பகமான மோட்டார் உறுப்புகளை டிவிஎஸ்ஸின் 17 ஆபீஸ்கள் 1000க்கு மேற்பட்ட விநியோக ஸ்தலங்கள் மூலமாகப் பெறலாம்

தரமான மோட்டார் உறுப்புகள் நடைமுறைச் செலவைக் குறைக்கின்றன என்பதை டிவிஎஸ் உணருகிறது. அதனால்தான் முதல்தரமான மோட்டார் உறுப்புகளைத் தயாரிக்கும் பெரிய நிறுவனங்களின் சாமான்களை, தென்னாடெங்கும் நான்கு மாநிலங்களில் எங்கள் 17 ஆபீஸ்கள், 1000க்கு மேற்பட்ட விநியோக ஸ்தலங்கள் மூலம் விநியோகிக்கிறோம். இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மோட்டார் உறுப்புகள் எப்பொழுதும் கைவசம் உள்ளன.

டி. வி. சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்-எர்ணாகுளம்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பங்களூர்-செகந்திராபாத்-விசாகபட்டணம்

மெட்ராஸ் ஆட்டோ செர்விஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பங்களூர்-விஜயவாடா-கள்ளிக்கோட்டை

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & அக்ஸெஸெரீஸ் லிமிடெட் மதராஸ்

டிவிஎஸ் உங்கள்
நம்பிக்கைக்கு உரியது

TVS

MAS/6088

APR 1971

குளிப்பின் களிப்பு...
குன்றாத ஆரோக்கிய சுகம்!

அழுக்கு பெரும் இழுக்கு...!
கிருமிகளின் உற்பத்தி இடம். உடல் துர்நாற்றத்தைப் போக்கி, கிருமிகளைக் களைந்து, சரும சுகம் பெற, காவேரி சூபர் நிகரற்ற ஸ்னான சோப்!

காவேரி
சூபர்

சால்முக்ரா தைலம் கலந்த சரும சோப்

கையடக்கமான "ஸைஸ்"
விலையும் குறைவு

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
சேலம் ஜில்லா

ஏஜெண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

MC955

ORWO

(Photo, Cine & X-Ray Films)

Manufactured by:

VEB FILMFABRIK WOLFEN

German Democratic Republic

Sole Distributors for Southern & Eastern India:—

ORWO FILMS EASTERN UNIT

Madras-6 : : Calcutta-17

குளிர்ந்த ஸ்நானத்திற்கு
மிகவும்
சிறந்தது.
அருணகிரி
விலாஸ்
சீயக்காய் பவுடர்
காரைக்குடி

Grams: DIEHEADS Phone: 75031

S. R. P. TOOLS LTD.,

(Manufacturers of Quality Metal Cutting Tools.)

Lattice Bridge: Madras-41

Reamers; End Mills; Slot Drills; Core Drills; Countersinks; Counterborer; Keyseating Cutters; 'T' slot cutters; Angle Cutters; Side & Face Cutters; Serrated Blades for inserted type Cutters; Special Tools etc; etc.

Testimonies

'—more satisfactory that the IMPORTED'

—Standard Motor Products of India Ltd.

'We are satisfied with ycur product'

—Ashok Leyland Ltd.

'Examined and fcund them quite satisfactory for our use'

—T. I. Cycles of India.

மலர் 27 உள்ளுறை இதழ் 12

உள்ளுறை

சாதாரண — பங்குனி

			பக்கம்
1.	காந்தி வாக்கு	...	7
2.	ஆத்ம சிந்தனை —*சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்*	...	9
3.	பல் சுவை	...	12
4.	ஞானத்திரட்டு—1 —*சுவாமி விவேகானந்தர்*	...	21
5.	திருநாகேசுவரம் கம்ப ஆட்டம் 1898	...	49
6.	பர்பா விசேஷங்கள் —*சாமியப்பன், அம்மாப்பேட்டை*	...	56
7.	கடல் அலையிலிருந்து மின்சாரம்	...	60
8.	கொய்த மலர்கள்	...	63

——:o:——

March, 1971.

காந்தி வாக்கு

அரசின் அதிகாரம் அதிகரிக்கும்போதெல்லாம் எனக்கு மிகுந்த அச்சம் ஏற்படுகிறது. ஏனெனில், சுரண்டலைக் குறைப்பதன் மூலம் அது நன்மை செய்வதாகத் தோன்றினாலும், தனி மனித சுதந்திரத்தை அழிப்பதன் வாயிலாக அது மனித வர்க்கத்துக்கு மிகுந்த தீமையே செய்கிறது. முன்னேற்றத்துக்கெல்லாம் ஆணி வேராக இருப்பது தனி மனித சுதந்திரம்தான்.

நல்லவனாக இருக்கவும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நன்மை செய்யவும் ஆசைப்படுகின்ற ஒருவன் அதிகார பீடத்தில் அமரக்கூடாது.

அரசாங்கப் பணம் இந்தியாவின் ஏழைப் பொது மக்களுக்குச் சொந்தமானது; அவர்களைவிட ஏழைகள் எவரும் உலகத்தில் இல்லை. நாம் அதிக விழிப்புடனும், அதிகக் கவனத்துடனும், அதிக ஜாக்கிரதையுடனும் இருக்க வேண்டும். பொதுஜனங்களிடமிருந்து நாம் பெறுகிற ஒவ்வொரு காசுக்கும் கணக்குக் கொடுக்க நாம் தயாராய் இருக்க வேண்டும்.

கணக்குகளைக் கவனமாய் எழுதி வைப்பது எந்த ஒரு ஸ்தாபனத்துக்கும் முதல் கடமையாகும். முறையான கணக்குகள் இல்லாமல் பரிசுத்தமான சத்தியத்தைக் கடைப்பிடிக்க முடியாது.

நாம் பெறுகின்ற ஒவ்வொரு காசுக்கும் கணக்குக் கொடுக்கா விட்டால், நிதிகளைக் கவனமான உபயோகிக்கா விட்டால், பொது வாழ்விலிருந்து நாம் அடியோடு ஒழிவது தான் சரி.

வெற்றியோ தோல்வியோ நம் கையில் இல்லை. நம் கடமையை நன்கு செய்தால் போதும். முயல்வதுதான் நம் பொறுப்பு. இறுதியில், ஆண்டவன் விருப்பப்படியே நடக்கும்.

பலனைப் பற்றிக் கவலையே படாமல் இருப்பதற்கு என்னை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பழக்கி வைத்திருக்கிறேன். வழியைப் பற்றித்தான் எனக்கு அக்கறை. வழி பரிசுத்தமானது என்று நான் நிச்சயமாக உணர்ந்தால், மேற்கொண்டு எனக்கு வழிகாட்டுவதற்கு என் நம்பிக்கையே போதுமானது. அந்த நம்பிக்கையின் முன்னிலையில் அச்சமும் நடுக்கமும் கரைந்து மறைந்துவிடும்.

மனிதனைக் கண்டு அஞ்சுவதை விட்டுவிட்டு, கடவுளின் சத்தியத்தில் மாத்திரம் நாம் நாட்டம் கொண்டால், நாம் எல்லோரும் ஆண்டவனின் தூதர்களாகி விடலாம்.

சத்தியத்தைத் தவிர வேறு யாரிடமும் எனக்குப் பக்தி இல்லை. சத்தியத்தைத் தவிர வேறு எந்தக் கட்டுப்பாட்டுக்கும் நான் உட்படுவதில்லை.

என்னுடன் விவகாரம் செய்வது சுலபம். ஒரு குறிப்பிட்ட கருத்தை நான் உறுதியுடன் ஆதரிக்கலாம்; ஆனால் அது தவறானது என்று தெரிந்தால் உடனே அதைக்கைவிட்டு விடுவேன்.

வருங்காலத்தைத் தெரிந்து கொள்வதில் எனக்கு விருப்பம் இல்லை. நிகழ்காலத்தைக் கவனித்துக் கொள்வதில்தான் எனக்கு அக்கரை. அடுத்து வரும் வினாடியைக்கூடக் கட்டுப்படுத்தும் சக்தியைக் கடவுள் எனக்கு வழங்கவில்லை.

கலைகள் எல்லாவற்றையும் விடப் பெரியது வாழ்க்கை. முழுமைக்கு மிக அருகில் உள்ள வாழ்க்கையைக் கொண்ட மனிதன்தான் மிகப் பெரிய கலைஞன் என்றுகூட நான் சொல்லுவேன். ஏனெனில், உன்னதமான வாழ்க்கை என்ற உறுதியான அஸ்திரவாரத்தையும் கட்டுக்கோப்பையும் பெற்றிரா விட்டால் கலைக்குப் பொருள் ஏது?

என்னுள்ளே இருக்கும் அந்த "சாந்தப் மென்குரல்" தான் இவ்வுலகில் நான் ஏற்றுக்கொள்ளும் ஒரே சர்வாதிகாரி.

ஆத்ம சிந்தனை

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்

உலக முன்னேற்றத்திற்காக அவதரித்த மகாத்மாக்களில் ஒருவரான கிரேக்க முனிவர் ஸோக்ரதரின் சரித்திரத்தையும், உபதேசங்களையும் தமிழில் 1921-ம் ஆண்டில் சுருக்கமாக எழுதியதுபோல் அவரைப்போன்ற மற்றொரு சிறந்த ஞானியான ரோமாபுரிச் சக்கரவர்த்தி மார்க்க அரேலியருடைய "ஆத்ம சிந்தனை"யைச் சுருக்கமாகத் தமிழ் மக்களுக்குப் பயன்படும் முறையில் 1928-ம் ஆண்டில் எழுதினேன்.

மார்க்க அரேலியருடைய 'சிந்தனை' யைப் பகவத் கீதைக்கு ஒரு சிறந்த வியாக்கியானமாகவே கருதலாம். அதிலுள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும் மேற்கோள்களாக கீதையிலிருந்து சுலோகங்கள் எடுத்துக் காட்டலாம்.

உடல் வேறு, ஆத்மா வேறு. சத்தியமே ஆத்மாவின் சந்தோஷம். உடலின் துன்பத்தைக் கண்டு மனம் தளர வேண்டாம். ஆத்மாவை எந்த நிகழ்ச்சியும் துன்புறுத்த முடியாதென்று ஸோக்ரதர் உபதேசித்தார். உலகம் முழுவதும் ஓர் அமைப்பு. தனி உயிரின் சுகத்தையும், துக்கத்தையும் விசுவ ரூபத்தில் அமைத்து விசால புத்தியுடன் நோக்கின் துவந்தங்கள் தீர்ந்து, சத்தியம் ஒளிபெற்று, சாந்தி உண்டாகும் என்பதை மார்க்கர் கண்டு எழுதியுள்ளார்.

"பல வகைப்பட்ட பூதங்களும் ஒரே ஆதாரமுடையன என்பதை அறிந்தவர் விஸ்தாரமான பிரமத்தை அடைகின்றார்."

—(கீதை அ-13. சு-13)

என்னும் கீதா வாக்கியத்தின் பொருளை அரேலியர் நேரில் கிருஷ்ண பகவானிடம் உபதேசம் பெற்றதுபோல் விஸ்தாரமாக விளக்கியிருக்கிறார். மார்க்க அரேலியர் "சிந்தனை"யை அடிக்கடி வாசிப்பதனால் மக்கள் மன உறுதி யும் சாந்தியும் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

வரலாறு

ஜனக மகாராஜாவுக்குப் பின் உலகத்தில் புகழ் பெற்ற இராஜரிஷிகள் இருவராவர். ஒருவர் பரத கண்டத்தை ஆண்ட அசோக மன்னர். மற்றொருவர் மேல் நாட்டில் உரோம ராஜ்யத்தை ஆண்ட மார்க்க அரேலியச் சக்கரவர்த்தி. இவர் அசோகருக்குப் பின், சுமார் நானூறு வருஷங்களுக்குப் பிறகு கி. பி. 161 முதல் 180-ம் வருஷத்தில் தேக வியோக மாகும் வரை அரசு புரிந்தார்.

மார்க்கருடைய "ஆத்ம சிந்தனை" பிறர் படிக்கவேண்டி எழுதிய ஒரு நூலல்ல. ஒரே காலத்தில் எழுதியதுமல்ல. அவ்வப்போது தனக்குத் தோன்றிய எண்ணங்களைத் தன் மனோ நிலையைத் திடப்படுத்திக் கொள்ளுமாறு தனக்குத் தானே உபதேசித்துக் கொண்ட முறையில் அவர் எழுதிய குறிப்புக்கள். அவைகளில் "நீ" என்பது மார்க்கரே. ஆனால், அவர் தனக்காக எழுதிய இக்குறிப்புக்களின் தொகை உலகத்தார் எக்காலமும் படிக்கத் தக்க சிறந்த வைராக்கிய தீபமாக விளங்கும் நூலாகும்.

விருப்பு, வெறுப்பு இரண்டையும் நீக்கிய உண்மைத் தவமும், ஒப்புரவறிந்து செய்தலாகிய இல்லறமுமே மார்க்க அரேலியருடைய உபதேசம்.

இன்பமும் துன்பமும் ஒருவன் சுதந்திரம். அவை உள் ளத்தின் நிலையே யன்றிப் புறப்பொருளில் இல்லை என்பதை பலவாறு அவர் வற்புறுத்துகிறார்.

உலகம் முழுவதும் ஓர் உயிர் கொண்ட அமைப்பு ; அதில் ஓர் அங்கமாவாய் நீ ; அதன் நன்மையை நாடுவதே உன் இயற்கைத் தருமம் ; ஆகவே ஒப்புரவறிந்து செய்தலே உன் கடமை ; அதுவே உன் நலம் ; நேர்வனவெல்லாம் தனியொருவனுக்குத் துன்பம்போலத் தோன்றினும் உலகத்தின் பொது நலனுக்காகவே நேரும் ; ஆகையால், எது நேரினும் மனம் கலங்காமல் பொறுத்துக் கொள்ளக் கடவாய் என்று தன் மனத்தை அடிக்கடி பல்வேறு விதங்களில் உறுதிப் படுத்திக் கொள்கிறார்.

சாந்த சம நிலையே தெய்வ பக்தி ; அதுவே ஆனந்தம் என்பது மார்க்கர் கொள்கை' இந்நிலையை அடையச் சாதாரண மனிதனும்கூடத் தைரியமாக முயலுமாறு அவர் வழி காட்டியிருக்கிறார்.

—'ஆத்ம சிந்தனை'
'லோகோபகாரி' வெளியீடு (1935)

பிரம சரியத்தைப் பாதுகாவாமலும், இளமையில் பணமும் பொருளும் தேடிச் சேர்க்காமலும் இருப்பவர்கள் ஒடிந்த வில் போல ஒன்றுக்கும் உதவாமல் இருந்துகொண்டு, கழிந்தவற்றை நினைந்து நினைந்து ஏங்குவார்கள்.

—பௌத்தம்

என்னை எய்துதற்கு, என்னைச் சேருவதற்கு உள்ள வழிகள், சாதனங்கள் அனைத்திலும் உலகிலுள்ள எல்லா உயிர்களிடமும் எல்லாப் பொருள்களிடமும் நானே இருப்பதாக மனத்தாலும் வாக்காலும் செயலினாலும் உணருதலே சிறந்தது.

—பாகவதம்

—:o:—

பல்சுவை

'சுதேசமித்திரனி'லிருந்து திரட்டியவை]

சென்னை மழை

சென்ற ஒரு பட்சமாக விடாது பெய்து வருகிற மழையானது 22½ செவி ஆயிருக்கிறது. எதிர்பார்க்கப்பட்ட 8 செவி போக மிகுதி 14½ செவியும் அதிக மழையே.

எங்கு பார்த்தாலும் எப்பேர்பட்ட வீடும் ஒழுக்கில்லாமலிருப்பது அபூர்வமே. சனிக்கிழமை அடித்த புயல் காற்றில் கட்டிடங்கள் சுவர்கள் விழுந்தனவோ என்னமோ தெரியவில்லை. ஆனால் போலீஸ் கமிஷனர் ரோட்டில் நிழல் தந்து வந்த ஒரு பெரிய மரம் விழுந்து விட்டதாம்.

வீடுகளும், சுவர்களும் திரும்ப சீக்கிரத்தில் உருவாகி விடலாம்; மரம் போனால் மறு மரம் வளர வெகுநாள் செல்வதால், இம்மரத்தின் நஷ்டம் பெரிதென ஓர் சகோதரப் பத்திரிகை விசனப்படுகிறது. அது உண்மையே.

இம்மழையில் விடிவு பிறந்திருப்பது கூவம் ஆறு ஒன்றிற்கு மட்டும்தான். அது இப்போது கிழித்துக்கொண்டு ஓடுவதைப் பார்த்தால் மழையைக் கண்டு கும்மாளம் போடுவதுபோல் காண்கிறது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முதலான ஆற்றோர வாசிகளுக்கு இதன் அழகை இப்போது காணுவது பெரும் ஆறுதலே.

—8—11—1898

★

ஓர் குருவும் சிஷியனும்

பம்பாய் மாகாணத்தில் ஒரு குரு தன்னுடைய சிஷியனை தன்னுடைய மூட்டையை எடுத்து வரும்படி சொல்லி சிஷியன் மறுத்ததின்மேல் குருவிற்கு கோபம் பிறந்து சிஷியனைத் தடிகொண்டு அடித்தாராம்.

சிஷ்யன் பிரதியாக குருவின் மண்டையைப் பிளந்து விட்டான். குரு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டு சிஷ்யன் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறானும்.

சிஷ்யனை அடிக்கப் புத்தி வரும் குணமுள்ள குருவிற்கு இந்த மரியாதை கிடைத்ததைப்பற்றி ஆட்சேபிக்கக் காரணமில்லாதிருந்தாலும், சிஷ்யனுக்கு இந்த நடவடிக்கை ஏற்பட்டது. புது நாகரீகத்தின் பயனென்றே சொல்லவேண்டும்.

—8—11—1898

★

சீமையில் அசுசியான வீடுகள்

இங்கிலாண்டிலும் இங்கு நம் பஞ்சமர்களைப்போல் அவ்வளவு சுத்தியாய் வீடு வைத்துக் கொண்டிருப்பவர்கள் உண்டு போலக் காண்கிறது. அங்கு காக்கர் மௌத் என்னும் இடத்தில் உள்ள கைத்தொழிலாளர்கள் இவ்விஷயத்தில் செய்யும் அட்டூழியம் தாங்காமலும், அவ்வசுத்தத்தையும் அதனால் உண்டாகும் தீங்குகளையும் நீக்கும் பொருட்டும் ஒரு பெரிய மனுஷன் பின் வருமாறு விளம்பரப்படுத்தியிருக்கிறாம் :—

“வீடுகளை”த் “திடீரென்று” எந்த நேரத்திலும் நானாவது, நான் ஏற்படுத்திய பெரிய மனுஷ்ராவது பரிக்ஷிப்போம். வரும்போதெல்லாம் சற்றும் தடை செய்யாது

தக்ஷணமே வீட்டைத் திறந்து முற்றும் காட்டவேண்டும். இப்படி பரிக்ஷிக்கும்போதெல்லாம் மிகச் சுத்தமாகவேயிருக்கும் வீடுகளில் வரிசைக்காக ஐம்பது வீடுகளின் எஜமானிகளுக்குத் தலைக்கு அரைப் பவன் இனும் கொடுப்பேன்."

இங்கிலாண்டிலும் இவ்வாறு இனும் கொடுத்து தங்கள் சுகத்தைத் தேடிக்கொள்ளக் கற்கவேண்டியிருக்கிறது.

இது நாம் அழுதலும் பிறவடமும் உள்ள நம் சிறு குழந்தைகளுக்கு, "நீ கத்தாது வயிறு நிறைய சாப்பிட்டு விட்டு என்னிடம் வந்தாயானால், உனக்கு நான் பக்ஷணம் கொடுப்பேன்" என்று சொல்லிச் சாப்பிடச் செய்வதுபோல இருக்கிறது. கரும்பு தின்னக் கூலியா!

—15—10—1898

★

நம் மகாராணி

ஆங்கிலேய மகாராணியாகிய நம் சக்கிரவர்த்தினியின் பாக்கியமே பாக்கியம்! புத்திர பாக்கியத்திலும், மற்றெல்லா பாக்கியங்களிலும்போல் உன்னதமானவள் எள்ளுப் பேரன் எடுத்துவிட்டாள். "ஏழைக்கு எள்ளுப் பேரன்; பணக்காரனுக்குப் பரதேசி கொள்ளி" என்னுமாறு இராமல் இகதில் இவ்வளவு சகல பாக்கியங்களும் நிறைந்திருப்பவர் அரிது அரிது. நம் இராசாத்தியிலும் புத்திரபாக்கியமுடையவன் எடின்பரோ என்னுமிடத்தில் ஒருவன் இருக்கிறான். அவனுக்கு எள்ளுப் பேரனுக்குப் பிள்ளை உண்டாய் இருக்கிறது. ஆனால் அவன் பரம ஏழை.

—15—10—1898

★

விபரீதம்

இங்கிலாண்டில் ஸ்ட்டாம்போர்ட் ஹில் என்னும் இடத்தில் ஒரு வெள்ளைக்காரர் அக்கினிப் பிரவேசம் செய்து கொண்டாராம்!

எவ்வாறெனில், ஒருநாள் அவர் பைசிகல் வண்டியில் ஏறிப் போகையில், திடீரென்று அவர் சட்டை தேகமெங்கும் தீப்பிடித்து வியாபித்து ஜுவாலை வளைந்து சூழ்ந்துகொள்ள, வழிப்போக்கர்கள் பார்த்து, தக்ஷணமே நெருப்பை அவித்து, அவரை விடுவித்து, "ஐயா, ரப்பர் வண்டிக்காரரே! உமக்கிந்த அவதி வருவானேன்? இது யார் செய்த மோசம்?" என, அவர் "இல்லை, நான் செய்து கொண்டதுதான்" என்ன, அப்பிரயாணிகள் "ஆகா! தங்களுக்கு இச்சிறுவயதில் உலகத்தில் இவ்வளவு வெறுப்பா, அதற்கென்ன நேர்ந்தது?" என்று மறுத்தும் கேட்க, ரப்பர் வண்டி ஞானிகள், "உலகத்தில் வெறுப்பால் அல்ல, புகைச் சுருட்டில் விருப்பால் இக் கதி வந்தது. குடித்துவிட்டு ஜேப்பில் வைத்தேன். அது எனக்குக் கொள்ளியாய் முடிய இருந்தது. நல்லவேளை நீங்கள் வந்து உதவுகிறீர்கள்" என்றாராம்.

மற்றொருவர் பைசிகல் வண்டி ஏறிப் போகையில் அகஸ்மாத்தாய் வழுவிக் கை தவறி கீழே விழ குபீரென சட்டையில் தீப்பிடித்து தேகத்திலிருந்த உடையெல்லாம் எரிந்து உயிர் தப்பினாராம். தீப்பிடித்தது எவ்வாறெனில் ஜேப்பியிலிருந்து நெருப்புப் பெட்டி கீழ் விழுந்து நொருங்கியதனாலாம். இவ்வித தீ விபத்துக்கள் சீமையில் அபூர்வமல்லவாம்.

ஆகவே இந்நாளில் மனிதர் கௌரவத்திற்கு ரப்பர் வண்டி இன்றியமையாத் துணை; ரப்பர் வண்டிக்கு புகைச் சுருள் இன்றியமையாத தோழன்; புகைச் சுருளுக்கு தீப்

பெட்டி இன்றியமையாத சகா. இம் மூன்று சம்பந்திகள் உடையவனே இக்காலத்துப் பெரிய மனிதன். இதுவே தற் காலத்து நாகரீகம்.

—13–10–1898

★

வர்த்தமானம்

புது கவர்னர் வண்டி:—இன்றைய தினம் காலமே வந்த புது கவானர் லார்டு வென்லாக் அவர்களுடைய உபயோகத் துக்காகச் சீமையிலிருந்து செய்து வந்த நேர்த்தியான 'ப்ரூவம்' என்னும் வண்டி யொன்று சென்ற புதன்கிழமைய தினம் சென்னைத் துறைமுகத்தில் கப்பலிலிருந்து இறக்கிக் கரை சேர்க்கப் பட்டிருக்கிறது.

—23-1-1891

★

['வைசிய மித்திரன்' பத்திரிகையிலிருந்து திரட்டியவை]

மேலைச் சிவப்பட்டியில் மற வியாபாரம்

சகாயமான விலை!

கட்டிடங்கட்க்கு வேண்டியபடி சயிஸ் பண்ணிய தேக்கு மரங்களும், காட்டு மரங்களும் வேண்டியவர்கள் நம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். விலை விபரம் கடித மூலமாகத் தெரிந்து கொள்ளலாம்.

குமட. கு. குமரப்ப செட்டி
மேலைச்சிவப்பட்டி

—9–2–1914

★

மோட்டார் பிரயாணம்

தேவகோட்டையிலிருந்து காரைக்குடி மார்க்கமாய் மதுரைக்குப் போக வேண்டியவர்களுக்கு மோட்டார் வசதி தேவகோட்டையிலிருந்து ஸ்ரீமத் வீர. லெ. ராம. பெத்தப் பெருமாள் செட்டியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

—23-2-1914

★

லீலா—ஒரு தமிழ் நாவல்

'லீலா' அல்லது 'அருளானந்தரின் ஆச்சரிய அனுபவங்கள்' என்னும் சிறந்த தமிழ் நாவல் ஒன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இதனை இயற்றி வெளியிட்டவர் மிஸ்டர் தி. சா. வேணுநாதம் என்பவராவர்.

இந்நாவல் உருவத்திற் சிறியதாயினும் விஷயத்திலும் கதைப் போக்கிலும் மிகப் பெரிதாகவே யிருக்கிறது. தமிழ்ப் பாஷையில் இதுவரையில் எழுதப்படாத ஒரு நூதன முறையில் இந்நாவல் எழுதப்பட்டிருக்கிறது.

அருளானந்தர் என்னும் பெயருடைய ஒரு வங்காளி, திருடர்களால் தாக்கப்பட்டு ரூபாய் 80,000 பறி கொடுத்ததோடு, அவர்களால் அடியுண்டு தன் சித்த சுவாதீனத்தையும் இழந்து விடுகிறார். பிறகு பத்து வருஷ காலங்களில் இவருடைய ஜீவியம் மாறுதலடைகிறது. ஆனால் இந்தப் பத்து வருஷ காலங்களில் நேர்ந்த மாறுதல்களை அவர் சிறிதும் உணரவே இல்லை. பத்து வருஷங் கழித்து தென்னாப்பிரிக்காவில் பெரிய கோடீசுரராயும், ஐரோப்பியராயும் இவர் விளங்குகின்றார். இப் பத்து வருஷ காலங்களில் அனேக

ஆச்சரியகரமான சம்பவங்கள் நிகழ்கின்றன. அவை படிப்பவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும் மனவெழுச்சியையும் தரத்தக்கவைகளாய் இருக்கின்றன.

இந் நாவலால் நாம் அறிந்து கொள்ளக்கூடிய **தேக தத்துவ—ஆன்ம தத்துவ** உண்மை ஒன்று புலப்படுகிறது. அதாவது, பலமான அடி, மூளையிலாவது அல்லது மூளையைப் பிற கருவிகளோடு சம்பந்தப் படுத்தும் நரம்புகளிலாவது படுமானல், மூளையின் நிலை பிறழ்ந்து விடுகிறதென்பதும், அப்படி பிறழ்ந்து விட்டால் முன்பின் நடந்த நிகழ்ச்சிகளை அறிந்து ஞாபகத்தில் வைக்கக் கூடிய சக்தி மூளைக்கு இல்லாமற் போகிறதென்பதுமாம்.

புரொபஸர் வில்லியம் ஜேம்ஸ் என்னும் அமெரிக்க ஆன்ம தத்துவ சாஸ்திரியாரின் கொள்கையும், இன்னும் பிரபல மேனாட்டுத் தத்துவ சாஸ்திரிகளின் கொள்கையும் இதுவே யாகும்.

நினைவுகளின் தொடர்ச்சி (Chain of thoughts) இடையில் இற்றுப்போகிறதென்றும், அதனால் ஆன்மாவுக்கு, நிகழும் நிகழ்ச்சிகள் ஞாபகத்திலிருப்பதில்லை என்றும் வில்லியம் ஜேம்ஸ் என்பவர் "**மூளையின் வினை நிலை**" என்னும் ஒரு அரிய விஷயத்தில் கூறுகிறார்.

இந்த மாதிரியான அரிய தத்துவ சாஸ்திர உண்மைகளை மிக எளிதிலே தமிழ்ப் பாஷையில் நாவல் மூலமாக விளக்குவதற்கு முன் வந்த மிஸ்டர் வேணுநாதத்தின் முயற்சி பெரிதும் பாராட்டத் தக்கது.

ஆங்கில பாஷையில் லார்டு லிட்டன் என்பவரும், இப்பொழுது பிரபல நாவலிஸ்டாகிய மிஸ் மேரி காரெல் என்னும் ஆங்கில மாது சிரோன்மணியும் ஆன்ம தத்துவ சம்பந்தமான நாவல்கள் பல இயற்றியுள்ளார்கள்.

ஆனால், நம் தமிழ் பாஷைக்கு, நாம் அறிந்த அளவில், இதுவே முதல் நாவலாகக் காணப்படுகின்றது. இப்புத்தகத்தின் விலை அணு நான்கே. வேண்டுவோர் மிஸ்டர் தி. சா. வேணுநாதம், 'ஆர்ட்னன்ஸ் வியூ' 22, ரட்டன் பஜார், பார்க் டவுன், சென்னை-1. என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்வார்களாக.

—உப தலையங்கம், 23-3-1914

★

ரெவரண்ட் ஆன்ட்ரூஸும் மிஸ்டர் காந்தியும்

இந்தியாவிலிருந்து தென்னாப்பிரிக்காவுக்குச் சென்ற ரெவரண்ட் ஆண்ட்ரூஸ் அங்குத் தம்மை வரவேற்க வந்திருந்த மிஸ்டர் காந்தியைக் கண்டவுடன் அவர் பாதங்களைத் தொட்டு நெற்றியில் வைத்துக் கொண்டாராம்.

—23-3-1914

★

மைசூரில் டிராம் வண்டி

மைசூரில் டிராம் வண்டி போடுவதற்கு மைசூர் கவர்ன்மெண்டார் ஆலோசித்து வருகிறார்கள். எஞ்சினியர் மிஸ்டர் கரியப்பாவை, மைசூர் கவர்ன்மெண்டார் இது சம்பந்தமாய் பம்பாய் நகரத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர் திரும்பியவுடன் அநேகமாய் டிராம் போடுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்படுதல் கூடும்.

—2-2-1914

★

மிஸ்டர் பி. நாராயண ஐயர்

'பூர்ண சந்திரோதயம்' என்னும் மாதப் பத்திரிகையின் அதிபரும், பிரபல ஹைகோர்ட் வக்கீலுமான மதுரை பி. நாராயண ஐயர் மதுரையில் கடந்த திங்கட்கிழமை இறந்து போனாரென்று அறிந்து விசனிக்கிறோம். இவர் பொது நலப் பிரியராயும், வைதிகப் பற்று உடையவராகவும், சிறந்த கல்விமானாயும் இருந்து வந்தார்.

—2-2-1914

★

மாமியார் கொடுமை

திருச்செங்கோடு அக்கிரகாரத்தில் வசிக்கும் ஒரு பிராமணத்தி தன் மருமகள் பாலைக் கைதவற விட்டு ஊற்றி விட்டதற்காகக் கொள்ளிக்கட்டையால் மருமகளுடைய கன்னத்தைச் சுட்டுப் பொசுக்கி விட்டாள். என்னே அநியாயம்!

—2-2-1914

★

பிரின்ஸெஸ் டூலிப் சிங்

அமெரிக்காவிலுள்ள பிரின்ஸெஸ் டூலிப் சிங் என்பவள், லைசென்ஸ் இல்லாமல் நாய்கள் வளர்த்து வருவதற்காகவும், வேலைக்காரர்கள் வைத்திருப்பதற்காகவும் வரி விதிக்கப்பட்டால், "பிரதிநிதித்துவம் இல்லாமல் வரி இல்லை" என்று கூறி அவள் வரி செலுத்த மறுத்து விட்டாள்.

—2-2-1914

ஞானத்திரட்டு—1

சுவாமி விவேகாநந்தர்

தமிழ்: வி. நடராஜ ஐயர் (1898)

[சென்னை 'லோகோபகாரி' 'ஞான சந்திரிகா' பத்திரிகைகளின் ஆசிரியர் ஸ்ரீ வி. நடராஜ ஐயர், விவேகாநந்த சுவாமிகளின் உபன்யாஸங்களை மொழி பெயர்த்து, 'ஞானத் திரட்டு' முதல் பாகம், இரண்டாம் பாகம் என்று இரு அரிய நூல்களை வெளியிட்டுள்ளார். 'ஞானத் திரட்டு' இரண்டாவது பாகம்தான் கிடைத்தது. 1898-ஆம் ஆண்டில், சென்னை தாம்ஸன் கம்பெனியின் மினர்வா பிரசில் பதிப்பிக்கப்பட்ட, 110-பக்கங்கள் அடங்கிய இந் நூலின் விலை எட்டணா. இப்புத்தகத்தின் மேலட்டையில் "A free rendering of Swami Vivekananda's Lectures in Lucid Tamil by V. Nataraja Aiyar" *என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.*

இப்புத்தகம் ஸ்ரீமான் விவேகாநந்த ஸ்வாமிகளின் பக்தி ஞான யோகங்களின் மொழி பெயர்ப்பு. இம் முயற்சியை சுவாமிகளே பாராட்டி மதராஸ் லோகோபகாரி மானேஜர் வி. நடராஜ ஐயருக்கு எழுதிய கடிதம்:

BALLEN VILLA, DARJEELING,
15th April, 1898.

I have much pleasure to acknowledge receipt of your letter of the 7th instant together with a copy of a Free Rendering in Lucid Tamil of some of my lectures. Indeed you have done a great service to the Tamil spea-

king people generally and to your anxious subscribers specially. It is no doubt very desirable that there be a broadcast spreading of all that I have said amongst the people, and the best mode of doing it is to render it in all the vernaculars of the country, and you are to be congratulated for taking the lead in right earnest.

Wishing you all success in your laudable venture and with blessings to you.

I remain,
Yours truly,
VIVEKANANDA.

'ஞானத் திரட்டு' இரண்டாம் பாகம் முழுவதையும் சிறு சிறு பகுதிகளாகத் தொடர்ந்து வெளியிடுகிறோம்.]

பக்தியோகம்

பக்தியோக மென்பது ஈசுவரனையடையும் பொருட்டு உண்மையான பிரீதியுடனுழைத்து ஸதாகாலமும் அவரது பாதாரவிந்தங்களைத் தியானித்துக் கொண்டிருப்பதே. மிகுந்த வன்பினால் சரீரம் பரவசமாகி ஒரு நிமிஷ நேரம் ஈசுவரனிடம் பக்தி செலுத்தினால் மோக்ஷ லக்ஷ்மியை அடைவது சுலபமாகும். நாரதர் கூறுகிறார்:—பகவானிடம் நாம் கொள்ளும் பரமப்பிரீதியே பக்தியெனப் படுகிறது. எந்த மனிதன் பக்தியோகம் செய்கிறானோ அவன் ஸர்வப் பிராணிகளிடத்தும் தயையுள்ளவனாய் யாரையும் வெறுக்காமல் எல்லா வஸ்துக்களிலும் திருப்தி கொள்ளுகிறான். இத்தகைய பக்தியானது உலகவின்பத்தை யடைவதற்கு ஒருபோதும் உபயோகமாகாது. ஏனெனில் உலகவாசை யிருக்குமளவும் உண்மையான பக்தி உண்டாகமாட்டாது. பக்தியானது கர்த்தைவிடப் பெரிது. யோகத்தைவிடச் சிறந்தது. ஏனெ

ளில் கர்மமும் யோகமும் ஒவ்வொரு வஸ்துவை யுத்தேசித்துச் செய்யப்படுகின்றன. பக்தியோ அப்படியல்ல. பக்தி செய்வதற்குக் காரணம் பக்தியே யன்றி வேறல்ல. பக்தியிஞல் உண்டாகும் நன்மை பக்தியே. ஆதலின் பக்தியே காரண காரியமாக விருக்கிறது. நமது முன்னோர்களாகிய மகரிஷிகள் பக்தியைப்பற்றியே ஸதாகாலமும் பிரஸ்தாபித்து கொண்டிருந்தார்கள்.

சிலர் நினைக்கிறபடி பக்திக்கும் ஞானத்துக்கும் அத்தனை வித்தியாசமில்லை. கடைசியில் இரண்டும் ஓரிடத்திற்ருன் முடிகிறதென்பதை நாம் கண்டு கொள்ளலாம். மோஷமடைய வேண்டி செய்யும் ராஜயோகமும் இம்மாதிரியே முடிகிறது. பக்திக்குள்ள பெருமை யெல்லாம் கூடி அது சுலப மார்க்கமாயிருப்பதனலேதான். மோக்ஷ சாம்ராஜ்யத்தை யடைவதற்குப் பக்தியே இலகுவான வழி. பக்தி முற்ருமலும் தேருமலும் இளமையாயிருக்கும்போது மத வெறியை உண்டாக்குகிற தென்னும் ஓர் குறைதான் அதிலுண்டு. இளம் பக்தியிற்படிந்த இந்துக்கள் மகம்மதியர்கள் கிறிஸ்துவர்களெல்லாம் பூர்வகாலங்களிலும் இக்காலத்திலும் சிற்சில சந்தர்ப்பங்களிற் செய்த கிரமத்தவறுகளான நடவடிக்கைகளை நாம் அறிந்திருக்கிருேம். ஒரே வஸ்துவிடம் பிரீதிகொண்டு நிஷ்டையிலிருப்பதே மற்ற வஸ்துக்களை வெறுக்கக் காரணமாகிறது. ஆயினும் இவ்வித நிஷ்டையில்லாவிட்டால் உண்மையான பக்தி உண்டாகமாட்டாது. தேர்ச்சியடையாத புத்தியும் பக்குவமடையாத மனமுங் கொண்ட ஸாமான்யப் பேர்வழிகளெல்லாம் கடவுளை வணங்குவதற்கு ஒரே வழியை அறிந்திருக்கின்றனர். அதாவது மற்ற மதஸ்தர் வணங்கும் தெய்வங்களை நிந்திப்பதே.

(இப்போது சிவஸ்மரணை செய்தால் செவியைப் பொத்திக்கொள்ளும் வைஷ்ணவர்களும் நாராயணஸ்மரணை செய்தால் காதில் நாராசம் விழுந்ததுபோல் அவஸ்தைப்படும்

சைவர்களுமுண்டு. நாய் எவ்வாறு தன்னுயிரைத் திரணமா யெண்ணி எஜமானனுடைய பொருளைக் காப்பாற்றுகிறதோ அதுபோல் மதா வேசம் கொண்ட பக்தர்கள் தங்கள் மதத்தையும் கடவுளின் பெருமையையும் உயிரைக் கொடுத்தாவது எப்பாடு பட்டாவது காப்பாற்றுகின்றனர். ஆனால் நாய் தன் எஜமானன் எவ்வித உடை தரித்து வந்தாலும் அவனை யின்னனென்று அறிந்துகொள்ளும். மதா வேசம் கொண்டவர்கள் அவ்வாறு அறியமுடியாது. மதவெறிக்காரர்களுக்கு நியாயம் தெரியாது. ஒரு மனிதன் சொல்வது சரியா அன்று வென்பதைக் கவனியாமல் சொல்லுகிறவர் யார் என்று விசாரிப்பார்கள். அவர் தங்களினத்தாராகவும் ஆசாரியராகவு மிருந்துவிட்டால் உடனே அவர் சொல்வதை வேதவாக்கிய மாக அங்கீகரிப்பார்கள். தம்மினத்தாரிடம் பரம விசுவாஸ மாயிருக்கும் இளகின இருதய முடைய ஒருவன் புற மதஸ்தனைக் கண்டால் வெட்டிவிடத் துணிகிறான்.

இவ்வளவு சங்கடமெல்லாம் பக்தியின் ஆரம்ப காலத்தி லிருக்குமேயன்றி அது முற்றிய காலத்திலிராது. பக்தியிற் சிறந்த பரம ஸாதுக்களிடம் கோபதாபம், மதா வேசம் முதலிய துர்குணங்களிரா நிறைந்த பக்தியுடையவர்கள் நிமலனுக்கருகிலிருப்பதால் பிறரை வெறுக்கும் கெட்ட குணம் அவர்களுக்குச் சிறிதேனும் இல்லை.

தியானம் என்பது ஓர் பாத்திரத்திலிருக்கும் எண்ணெயை மற்றொரு பாத்திரத்திலூற்றும்போது இடை விடாமல் சேர்ந்தபடியாய் விழுவதைப்போல் குறித்த ஓர் பொருளைப் பற்றியே நினைவு கொண்டிருப்பதாம். சுவாமியைப் பற்றி இவ்வித நினைவு உண்டானவுடன் நமது பந்தங்கள் அறுபடுகின்றன. இவ்விதமாக பகவன்னமஸ்மரணையால் மோக்ஷ முண்டாகுமென்று நம்முடைய வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. பகவானைத் தியானிப்பதும் அவரைத் தரிசிப்

பதும் ஒன்றே. ஏனெனில் இவ்விரண்டினாலும் பெறப்படும் பயனொன்றேயாம். "எவன் நமக்கு தூரமாயும் சமீபமாயு மிருக்கிருனே அவனை நாம் தரிசித்தவுடன் நமது பந்தங்கள் அறுபட்டு சகல சந்தேகங்களும் மறைந்து சகல கர்மங்களும் தொலைகின்றன." என்பது வேத வாக்கியம். (ஸமீபத்தி லிருப்பவனைப் பார்க்கக்கூடும். தூரத்திலிருப்பவனை நினைக் கக்கூடும். ஆகிலும் வேதமானது அருகிலும் தூரத்திலு முள்ளவனை நாம் பார்க்கவேண்டுமென்று கட்டளையிடுகிற தால் கடவுளைப் பார்ப்பதும் தியானிப்பதும் ஒன்ருகிறது.) இவ்வித தியானம் தேர்ச்சி யடைந்தால் தரிசனம்போல் பல னைத் தரும். வேதங்களிலுள்ள ஸாரத்தை யோசிக்கின் தியானமும் தரிசனமும் ஒன்றெனவே யறிகிரோம். தரிசிப் பதைப்போலவே பலனைத் தரக்கூடிய தியானமானது கடவுளை இடைவிடாமல் எப்போதும் நமது ஞாபகத்திலிருத்து வதென்று பொருள் படுகிறது.

"பக்தியில் கரை கண்டவர்கள் முக்தியைக் கொள்ளைக் கொண்டவர்கள்" என்பது சுருதி வாக்கியம். தரிசனத்துக்கு ஸமானமான பரமதியானத்தால் வீடுபெற வகையுண்டென்று வேதம் முறையிடுகின்றது. புத்தியினுலாவது சாஸ்திரங் களினுலாவது வேதாத்தியயனங்களினுலாவது ஆத்மாவை அடைய முடியாது. எவனை ஆத்மா விரும்புகிறதோ அவனே அதைக்காண வல்லவன். அவனுக்குத்தான் ஆத்மா தன் ஸ்வரூபத்தைக் காட்டுகிறது. பகவானுடையக் கதையை கேட்பதாலும் அவரை நினைப்பதாலும் தியானிப்பதாலும் அவருடைய ஸ்வரூபம் நமக்குத் தெரிந்துவிடுமா வெனின் 'இந்த ஆத்மா யாரை விரும்புகிறதோ அவனே அதைத் தரி சிக்கிருன். எதனிடம் மிகுந்த பிரீதி வைக்கிரோமோ அதையே நாம் விரும்புகிரோம். யார் இந்த ஆத்மாவிடம் அதிகமான பிரீதி கொள்ளுகிருனே அவனே அதன் கிருபைக்குப் பாத்திர ஞகிருன்' இவ்வாறு ஆத்மாவின் கிருபைக்கு எவன் பாத்திர

ஞகிருனே அவன் அவ்வாத்மாவை யடையுமாறு பகவானே உதவி செய்கிருர். பகவான் சொல்லுகிருர் :—" எவர்கள் என்னை எப்போதும் பக்தியுடன் உபாஸிக்கிருர்களோ அவர்கள் என்னை அடையும் மார்க்கத்தை நானே காட்டுகிறேன் " ஆதலின் எந்த மனுஷ்யன் தரிசனத்தைப்போல் பலனைத் தரும் தியானத்தைச் செய்கிருனே அவனிடம் பகவான் பிரீதி கொண்டு அவனைத் தம்மிடம் ஐக்கியம் செய்து கொள்ளுகிருர். இப்படி அடிக்கடி பகவானை ஸ்மரிப்பதே பக்தி யெனப்படுகிறது.

மேற் கூறியபடி ராமானுஜாசாரியர் தாம் செய்த பாஷ்யத்தில் சொல்லியிருக்கிருர். வியாஸபகவான் பக்தியைப் பற்றி அடியில் வருமாறு கூறுகிருர். "யோகிகளிடம் பகவான் கருணைகொண்டு பிரஸன்னமாகி அவர்கட்கு வேண்டிய வரன்களைக் கொடுக்கக்கூடிய அத்தனை அன்பே பக்தியெனப்படும்". பிரகலாதர் சொல்லுகிருர்: "மூடர்கள் சிற்றின்பங்களில் வைக்கும் அழிவற்ற ஆசையை ஹேபகவன், நான் உம்மிடம் வைக்கும்படி நீர் கிருபை செய்யும் அவ்வித அன்பு என் மனதை விட்டகலாமலிருக்க வேண்டுகிறேன். ஆசை ! எதன்மேல் கொள்ளவேண்டும் ? ஈசுவரன்மேல் இதர பதார்த்தங்களின் மீது கொள்ளும் ஆசை பக்தியாகாது. ஓர் பரமசாரியர் கூறுகிருர் : "பிரம்மா முதல் பூமியில் முளைத்திருக்கும் புல்வரை ஸகல வஸ்துக்களும் ஜனனமரண உபாதைக்குள்ளடங்கி யிருக்கின்றன. எல்லாப் பொருள்களுக்கும் கர்ம பந்தமுண்டு. ஆதலின் அவைகளெல்லாம் தியானம் செய்ய அருகமல்ல. ஏனெனில் அப்பொருள்கள் யாவும் மாயையில் சிக்கிக் கிடக்கின்றன. ஆதலின் பக்தியென்பது ஸாதாரண உபாஸனையில் தொடங்கி ஈசுவரனிடம் அளவற்ற ஆசையைக் கொள்வதில் முடியும் மத சம்பந்தமாய் அடுத்தடுத்து இடைவிடாமற் செய்யும் மனோ முயற்சியாம்.

ஈசுவரன் யார்? இவ்வுலகத்தை ஆக்கி அளித்து அழிப்பவர் எவரோ அவரே ஈசுவரன். அவர்தான் ஸர்வ வல்லமையுள்ளவர். பரம ஞானி. பரமாசாரியர்.

இதுதான் ஸகுணப் பிரம்மத்தின் லக்ஷணம். ஆனால் இரண்டு கடவுளுண்டோ? "இதுவல்ல. இதுவல்ல ஸச்சிதானந்தம் என்று கூறும் ஞானிகளின் கடவுளும், பக்தன் உபாஸிக்கும் கடவுளும் ஒன்றுதான். ஸச்சிதானந்தமாகிய பரப்பிரம்மம்தான் பக்தனலுபாஸிக்கப்படும் தெய்வம். பக்தன் தியானம் செய்யும் ஈசுவரன் வேறு" பரப்பிரம்மம் வேறு என்று நினைக்கக் கூடாது. எல்லாம் பிரம்மமே. பிரம்மம் ஒன்றேயன்றி இரண்டல்ல. பிரம்மத்தைத் தியானிப்பது கஷ்டமாகையால் அதன் ஸகுண ஸ்வரூபத்தைப் பக்தர்கள் ஆராதிக்கின்றனர். இதற்கொரு உபமானம் சொல்லலாம். பிரம்மம் என்பதை களிமண்ணாக வைத்துக்கொள்வோம். சிவன், விஷ்ணு முதலிய மூர்த்திகள் அக்களிமண்ணாலாகிய பானை சட்டிகளென்றேற்படும். களிமண் என்ற விஷயத்தில் பானை சட்டிகளெல்லாம் ஒரே தன்மையுடையன. ரூபமும் தோற்றமும் மட்டும் வேருயிருக்கின்றன. பானையாவது சட்டியாவது உண்டாகுமுன் அவைகள் களிமண்ணாகவேயிருந்தன. ஆனால் ரூபத்தை யடைந்தபின்னர் வெவ்வேருக காணப்படுகின்றன. களிமண்ணலான சுண்டெலி களிமண்ணலான யானையாகமாட்டாது. ஏனெனில் தோற்றமானது வித்யாஸப்படுத்துகிறது. ரூபமுண்டாவதற்கு முன் எல்லாம் ஒரே தன்மையையுடைய களிமண்ணாகவே யிருந்தன. பரப்பிரம்மத்தை மனதால் நினைக்கக்கூடிய மகா மகிமை பொருந்திய தோற்றம் ஈசுவரன் எனப்படுகிறது. உலக சிருஷ்டி எப்போதுமுள்ளதுபோல் ஈசுவரனும் எப்போதுமுள்ளவர்.

வியாஸர் தாம் செய்த சூத்ரங்களில் மோக்ஷமடைந்தவர்களுக்குக் கிடைக்கும் ஞானத்தையும் சக்தியையும் பற்றிச்

சொல்லுங்கால் எவருக்கும் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமாகிய முத்தொழில் நடத்தும் ஸாமர்த்தியம் வரமாட்டாது. அது பகவான் ஒருவருக்கே யுரித்தானது, என்றார். இந்த சூத்ரத்துக்கு பாஷியம் செய்த துவைதிகள் ஜீவனுக்குப் பரமாத்மாவின் சக்தி ஒருபோதும் வரமாட்டாதென்று வியாக்யானம் செய்திருக்கிறார்கள்.

இந்த சூத்ரத்துக்குப் பாஷ்யம் செய்த ராமானுஜாசாரியர் அடியில் வருமாறு கூறுகிறார் :—மோக்ஷமடைந்தவர்கள் பகவானைப்போல் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமாகிய மூன்று அதிகாரங்களையும் அடைகிறார்களா அல்லது பகவானைப் பார்க்கும் சுதந்திரத்தை மட்டும் அடைகிறார்களா வென்பது ஓர் கேள்வி. இதில் ஓர் நியாயமுண்டு. அதாவது வேதத்தில் 'மோக்ஷம் பெறுகிறவன் கடவுளைப் போலவே ஆய்விடுகிறான்' என்றிருக்கிறது. ஆதலின் அவருடைய மூன்று சக்திகளும் மோக்ஷ மடைந்தவனுக்கு உண்டாகவேண்டியது நியாயமே. அப்படி உண்டாகாவிட்டால் கடவுளுக்கும் அவரை அடைந்தவருக்கும் ஒரேவித சக்தியுண்டாமென்பது எவ்வாறு பொருந்தும்? இதற்கு விடை யாதெனில் முக்தி யடைந்தவர்கள் ஜெகத்தையாளும் சக்தியொன்றைத் தவிர மற்ற சக்திகளையெல்லாம் அடைகின்றனர். ஜெகத்தையாள்வதாவது அதிலுள்ள சேதனு சேதன வஸ்துக்களின் அறியாமையைப் போக்கி பந்தத்தினின்று விடுவித்தலாம். இதற்கும் சுருதி வாக்கியமுண்டு. எவனிடமிருந்து எல்லா வஸ்துக்களும் பிறக்கின்றனவோ, எவனால் பிறந்த வஸ்துக்கள் ஜீவித்திருக்கின்றனவோ, எவனால் அவ்வஸ்துக்களெல்லாம் லயத்தை யடைகின்றனவோ அவனே பிரம்மம். இந்த குணம் முக்தி யடைந்தவர்களுக்கு முண்டெனின் பிரம்மத்துக்குமட்டும் உரித்தாவதெப்படி? பொதுவாயிராமல் சிறப்பாயுள்ள குணத்தையே ஓர் பொருளுக்கு வரையறுத்துச் சொல்ல வேண்டும் மாதலின் முத்தொழில் ஈசுவரனுக்கே உரிமை

யென்றும் முக்தியடைந்தவர்களுக்கில்லை யென்றும் ஸ்பஷ்டமாகிறது. ஆதியில் பிரம்மம் ஒன்றே யிருந்தது. அதினின்றும் அனேக தேவதைகளுண்டாயின. வருணன், ஸோமன், ருத்திரன், எமன், மிருத்யு, ஈசானன் என்பன. ஆத்மா ஆதியில் தனிமையாயிருந்தது. வேறொரு பொருளும் அப்போது சலிக்கவில்லை. அவர் பார்த்து உலகத்தை யுண்டாக்கினார். நாராயணன் ஒருவரே ஆதியிலிருந்தார். அப்போது பிரம்மா, ஈசானன், தியாவாபிருதிவி, நக்ஷத்திரங்கள், அக்கினி, ஸோமன், சூரியன் முதலிய தேவதைகளுண்டாகவில்லை இதற்கு அத்வைதிகள் என்ன ஸமாதனம் சொல்லுகிறார் களென்று பார்ப்போம். துவைதிகள் சொல்லுகிற வைகுண்டம், கைலாஸம் முதலியவற்றை ஒப்புக்கொள்ளுகிறார்கள். கோபிகைகள் தங்களையும் கிருஷ்ணனையும் ஒன்றாக நினைத்து மெய் மறந்திருக்கையில் கிருஷ்ணனாகவே விளங்கினார்கள். பின் சில நேரத்துக்கெல்லாம் மாயை யுண்டாகி தாங்கள் வேறு கிருஷ்ணன் வேறு என்றறிந்து பகவானைப் பரப்பிரம்மமாகப் பாவிக்காமல் ஓர் புருஷனாக வெண்ணிப் பக்தி செய்தார்கள்.

சங்கராசாரியர் கூறுகிறார் "பிரம்மத்தை ஸகுணமாகப் பாவித்துப் பூஜித்து மோக்ஷமடைந்தவர்கள் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமாகிய மூன்று கிருத்தியங்களைத் தவிர, மற்ற சக்திகளை யடைவார்கள். மேற்கூறிய மூன்று சக்திகளும் ஈசுவரனுக்கே உரித்தானவை. மோக்ஷமடைந்தவர்களில் சிலர் சிருஷ்டிக்கவும், சிலர் ரக்ஷிக்கவும், சிலர் ஸம்ஹரிக்கவும் எத்தனப்படுவார்களாதலின் கடவுள் மேற்கூறிய சக்திகளை அவர்களுக்குக் கொடுக்கவில்லை. மோக்ஷமடைந்தவர்களெல்லாம் பகவானுடைய இஷ்டப்படி நடக்கக் கட்டுப்பட்டவர்கள். ஆனால் ஸாயுச்சியமாகிய மேலான பதவியை யடைந்தவர்கள் அதாவது பகவானை நிர்குணப் பிரம்மமாய்ப் பாவித்துத் தியா

னித்தவர்கள் விஷயத்தில் இவ்வித கேள்வியே யில்லை. அவர்களுக்கு எல்லாம் ஒரே பிரம்மமாய்த் தோன்றுமேயன்றி மாயை யென்பது ஒருபோது முண்டாகாது.

ஸகுணப் பிரம்மத்தினிடமே பக்தி செய்ய முடியும். ஞானிகளுக்கு பக்தி மார்க்கம் எளிதாயிராது. நம்முடைய சுபாவத்துக்குத் தக்கபடி பக்தியானது சுலபமாயும் ஸாத்திய மாயு மிருக்கவேண்டும். குணாதீதமாகிய பிரம்மத்தை நாம் மனதால் நினைப்பதுகூட கஷ்டமாயிருக்கும். வெகுகாலங்களுக்கு முன்னிருந்த கபிலர், மனிதனுடைய அறிவைப் பற்றி அடியிற் கண்டபடி கூறியிருக்கிறார். (கபில பகவான் ஆதி காலத்திலிருந்த பெருமை தங்கிய மனோதத்துவ சாஸ்திரி) நமக்குள்ளும் புறம்பும் இருந்து நம்மால் பார்க்கப்படுகிற அல்லது உணரப்படுகிற சகல வஸ்துக்களையும் உண்டாக்கும் பல வஸ்த்துக்களில் மனுஷ அறிவு ஒன்று. நமது சரீரங்களில் தொடங்கி ஈசுவரனிடம் போகும் வரை நாம் பார்க்கிற ஒவ்வொரு வஸ்துவும், இவ்வறிவும் இன்னும் சில வஸ்துக்களும் சேர்ந்ததே யன்றி வேறல்ல. இப்படி ஒவ்வொன்றிலும் சேர்ந்துள்ள வஸ்துவையே நாம் உண்மைப் பொருளென்கிறோம். ஆதலின் ஈசுவரன் இல்லையென்று சொல்வதுமூடத்தனம். இவ்வுலகத்தில் மற்ற வஸ்துக்கள் எவ்வாறு உண்மையாக இருக்கின்றனவோ அவ்வாறே ஈசுவரனும் உண்மையாகவிருக்கிறார்.

மேற்கூறிய சங்கதிகளெல்லாம் பக்தனுக்கு அவசியமாய்த் தெரியவேண்டியவைகளே. அவ்வாறு தெரிந்தால் அவனுடைய பக்தி இன்னும் பெருகிவிட முண்டாகும். பக்தர்களுக்கு மதவிஷயமான தர்க்கம் தெரியவேண்டிய அவசியமில்லை. அவர்களுடைய மார்க்கமே அவர்களை மோக்ஷத்தில் கொண்டுபோய்விடும். ஈசுவர கிருபையால் பக்தன் பரம பதத்தை யடைகிறான். அங்கே தர்க்கமும் நியாயமும் அவசியமில்லை. நேரில் ஈசுவரனைத் தரிசிப்பவனுக்கு மேற்கூறிய

சாஸ்திர நியாயங்கள் வேண்டியதில்லையன்றோ? அவன் நியாயத்தை யுணர்ந்து நம்பிக்கைக் கொள்ள வேண்டுமென்னும் விதியில்லை. தானே பகவானைப் பார்க்கிறான். தானே மோக்ஷவின்பத்தை அனுபவிக்கிறான். இது எல்லா மார்க்கங்களையும்விட சிறந்ததன்றோ? மோக்ஷத்தைவிட பக்தியே வேண்டியதென்றும் சிறந்ததென்றும் சொல்லும் பக்தர்களு மனேகருண்டு. பக்தியே பரம பிரயோஜனமன்றோ? சில ஜனங்கள் இகலோக சவுக்கியங்களையே பெரிதா யெண்ணுகிறார்கள். அவர்களுக்கு மதம், தெய்வம், நித்யம், ஆத்மா ஆகிய இவைகள் லக்ஷ்யமில்லை. ஏனெனில் மேற்கூறியவைகளால் பணம் சரீர சவுக்கியம் ஆகிய இவைகள் கிடைக்கவில்லையன்றோ! அப்படிப்பட்டவர்களுக்கு அவர்களது ஐம்புலனையும் ஆனந்தப்படுத்தாத வஸ்துக்கள் உபயோகமாகாத்தோன்றா? ஒவ்வொருவருடைய மனதிலும் உபயோகம் என்பது அவரவர் மனதின் நிலைமைக்குத் தக்கபடியிருக்கும். உண்பது, உடுப்பது, மக்களைப் பெறுவது, இறப்பது ஆகிய இவைகளையே அவசியமான பெரிய காரியங்களாய் நினைப்பவர்கட்கு புலன்களால் விளையுமின்பமே பெரிதாயிருக்கும். அத்தகையோர் அனேக ஜன்மங்கள் எடுத்த பின்னரே தேக சுகத்தை மிஞ்சின மற்றொரு சுகத்தை அடைய வேண்டுமென்று மனதில் நினைப்பார்கள். ஆனால் இவ்வுலக வின்பம் நிலையற்றதென்று இதை வெறுத்து கடவுளிடமே பக்தி செய்யும் புண்ணியவான்களுக்கு அவர் அளவற்ற கிருபையைச் செய்கிறார். உலக வின்பத்திலுழன்று திரியும் சதகோடி ஜனங்களில் சுவாமியைப் போற்றுவோர் சிலராவதிருக்கின்றனரே யென்று நாம் சந்தோஷமடைகிறோம்.

பக்தியில் இரண்டு வகையுண்டு. (பரபக்தி, அபரபக்தி). பக்தியின் ஆரம்பத்தில் நமக்குப் பல உதவிகள் வேண்டும். பலவிதமான மந்திர தந்திரங்களும் கிரியைகளும் அக்காலத்தில் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியதுதான். இவ்வித

இளம் பக்தியைக் கொண்டிருப்பவர்களுக்குத்தான் பரமசாரியர்கள் ஏற்பட்டனர். தங்கள் சரீர போஷணையில் மட்டும் கவனம் வைத்து உலகவின்பத்தை மாத்திரம் பெரிதாயெண்ணி ஆசாரங்களில் சீர்திருத்தம் செய்யத் தொடங்குகிறவர்கள் அநேகர். இவர்கள் கேவலம் நாஸ்திகர்களையே ஒப்பாவர். நாம் ஆத்மஞானத்தையுடையுமாறு உபதேசிக்க வல்ல ஆசாரியர் ஒருவர் அகப்பட்டால் போதும். அவர் சொல்வதைக் கேட்கக் கடவோம்.

ஆசாரியன் அவசியமென்பது.

ஒவ்வொருவனும் முக்தனுகவேண்டும். நாம் இப்போதிருக்கும் நிலைமை முற்பிறப்பில் செய்துள்ள கர்மங்களால் உண்டானது. மறுபிறப்பில் நாம் அடையும் நிலைமை இப்போது திரிகரணங்களால் நாம் செய்யும் கருமங்களாலாகுமென்பது நிச்சயம். இவ்வாறு நம்மை நாமே இரக்ஷித்துக் கொள்ளலாம். ஆயினும் வெளியிலிருந்து நமக்கு உதவி கிடைப்பதும் நன்மையேயாம். அநேகருக்கு அவ்வித உதவி கிடைத்தால் ஆத்மஞானம் சீக்கிரமாயுண்டாகி முக்தி கிடைக்கும். இவ்விதமான அதிதீவிர பக்குவம் புஸ்தகங்களால் உண்டாகாது. ஒரு ஆத்மா மற்றொரு ஆத்மாவாலேயே தீவிரமான பக்குவத்தை யடையவேண்டும். இனத்துடன் இனம் சேருமென்றது பொதுவிதி. நம்முடைய வாழ்நாள் முழுவதும் நாம் புஸ்தகத்தையே படித்துக் கொண்டிருக்கலாம். மகா மேதாவிகளாகலாம். கடைசியாக நமது மனம் பக்குவமடையாமற் போய்விடும். புஸ்தகங்களைப் படிப்பதால் நம்முடைய புத்தி விசாலப்படுகிறதேயன்றி ஆத்மஞான முண்டாகிறதில்லை. இதனாலன்றோ அநேக புராணிகர்களும் பாகவதர்களும் பிறருக்கு உபதேசம் செய்வதுபோல் தாங்கள் அனுஷ்டிக்க முடியாமல் அவதிப்படுகின்றனர்.

ஆதலின் நாம் ஆத்ம ஞானத்தைச் சீக்கிரமாக அடைவதற்கு ஓர் குருவை ஆசிரயிக்கவேண்டும்.

குருவுக்கு போதனு சக்தியும் சிஷ்யனுக்கு போதித்தவைகளைக் கிரகிக்கும் சக்தியுமிருக்கவேண்டும். விதையும் நல்லதாயிருக்கவேண்டும். நிலமும் நன்ருய் உழுது பண்படுத்தப்பட்டிருக்கவேண்டும். இவ்விரண்டு நிபந்தனைகளும் நிறைவேறினுல் உண்மையான மதம் உடனே ஓங்கிவிடும். மதப் பிரஸங்கி மகா புத்திமானுயும் சிரவணம் செய்யும் சிஷ்யர்கள் புத்திசாலிகளாயுமிருந்தாலன்றி பிரஸங்கம் பயன்படாது. அத்தகையோரே உண்மையான குருக்களென்றும் சிஷ்யர்களென்றும் சொல்லப்படுவர். மற்றவர்கள் வேதாந்தக் கிரந்தங்களை வைத்துக்கொண்டு வீண்பொழுது போக்குகிறவர்களாவர். (சிலர் பகவத் கீதை படிப்பதாகப் பெரிய ஆர்ப்பாட்டம் செய்து காரியத்தில், கீதையிற் சொல்லியிருப்பதற்கு முற்றிலும் மாருக நடக்கின்றனர். இது வீண் காலக்ஷேபமாயினும் இதனுல் ஒரு வேளை நன்மையுண்டாகவும் கூடும். ஆத்ம ஞானத்தை யடையவேணுமென்ற விருப்பம் ஒரு சமயம் உண்டாகி அதனுல் கடைத்தேறலாம்). எவன் ஆத்ம விசாரணை செய்யத் தொடங்குகிருனே அவனுக்கு நிச்சயமாக ஓர் ஆசாரியர் கிடைப்பார். "பள்ளமிருக்குமிடத்தில் தண்ணீர் தங்கும்" என்னும் பழமொழிபோல ஆத்ம விசாரணை செய்ய ஆசை படுவோனிடம் ஆசாரியன் தாமே சென்று போதிக்கத் தொடங்குவார்.

சிலருக்கு ஒவ்வொரு வேளையில் வைராக்கிய முண்டாவதுண்டு. இது நீடித்திராது. இதை உண்மையாய் மனதிலுண்டாவதென்றெண்ணத் தகாது. அநேக தடவைகளில் இவ்வித வைராக்கியம் நமக்கே உண்டாயிருக்கிறது. நமக்கு நெருங்கிய பந்து ஒருவனிறந்துபோகிருன். உடனே மனதில் வியஸனமுண்டாகிறது. உலகவின்பமெல்லாம் நம்முடைய

விரலினின்று நழுவி விழுகிறதென்றெண்ணுகிறோம். இந்த இன்பம் நிலையற்றது. இதைவிட பெரிதான வேறொரு இன்பம் நமக்கு வேண்டியதென்று உணர்கிறோம். சில நாளைக்கெல்லாம் இந்த எண்ணம் மறைந்து போகிறது. பழய கருப்பனே கருப்பன் என்பதுபோல் ஆய்விடுகிறோம். (வைராக்கியம் மூன்று வகைப்படும். ஸ்மசான வைராக்கியம், புராண வைராக்கியம், பிரஸூத வைராக்கியம்) இம்மூன்றுவித வைராக்கியங்களும் நிலையற்றன. ஸ்மசான வைராக்கியமானது: யாரேனும் இறந்து ஸ்மசானத்தில் தகனம் செய்யப்பட்டால் ஐயோ நம்முடைய கதியும் இப்படித்தானே யாகும். இச்சரீரம் நிலையற்றது. இதன்மேல் அபிமானம் கொள்ளலாகாதென்று தீர்மானிக்கிறோம். ஸ்மசானத்தினின்று வீட்டுக்கு வந்தவுடனே இந்த தீர்மானம் பறந்து போகிறது. புராண வைராக்கியமாவது புராணங்களைக் கேட்கும்போது இன்ன பாபம் செய்தவருக்கு இன்ன நரகம் கிடைக்குமென்று தெரியவருகிறது. உடனே நாம் பாபம் செய்கிறதில்லை என்று உறுதிக் கொள்ளுகிறோம். இவ்வுறுதி வீட்டுக்கு வந்தவுடன் போய்விடுகிறது. பிரஸூத வைராக்கியமென்பது பிள்ளைப் பெறும்போது படும் வேதனையால் இனி புருஷனிடம் சேருகிறதில்லையென்று பிரதிக்ஞை செய்து கொள்வதும் பிறகு சிலநாளைக்கெல்லாம் அதை மறந்து விடுவதுமாம். ஆதலின் இவ்வித வைராக்கியங்களாயிராமல் உண்மையான வைராக்கிய முண்டானாலன்றி நாம் தத்துவார்த்தங்களை யறிய அருகர்களன்றென்று தெரிந்து கொள்ளவேண்டும்.

ஆசாரியர்களிலும் சிலர் தங்களுக்கு அதிகமாய்த் தெரியுமென்று அபிநயத்து சிஷ்யர்களுக்கு உபயோகமற்ற உபதேசங்களைச் செய்து கடைசியில் படுகுழியில் விழுகின்றனர். குருடனைக் குருடன் நடத்துவதுபோல் ஞானமில்லாத ஆசாரியன் அஞ்ஞானியாகிய சிஷ்யனுக்கு உபதேசம் செய்கிறான்.

நல்ல ஆசாரியன் இன்னுரென்று நாம் அறிந்துகொள்வதெப்படி? சூரியனைப் பார்ப்பதற்கு தீவட்டி வேண்டியதில்லை. விளக்கைக் கொண்டு சூரியனைப் பார்க்கவேண்டாம். சூரியன் உதயமானவுடன் நமக்குத் தெரிந்துவிடுகிறது. உலகத்துக்கெல்லாம் உபதேசம் செய்ய வல்ல ஆசாரியன் வந்தவுடனே ஆத்மா அவனை அறிந்துகொள்ளுகிறது. உண்மை எப்போதும் உண்மையே. அதை வேறு விஷயங்களால் ருஜுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. உலகமெல்லாம் உண்மையின் சொரூபத்தை நன்ருய் அறிந்துகொள்ளும். சூரியனது ஒளியைப்போல் புத்தியும் ஸாமர்த்தியமுமுடைய பரமாசாரியர்களை உலகத்தார் தெய்வமாகப் பாவித்து வணங்குகிருர்கள். இவர்களுக்கு அடுத்தபடியாயுள்ள சில ஆசாரியர்களுமுண்டு. அவர்களின் யோக்யதையை அறிய நமக்கு சாமர்த்தியமில்லாததால் நாம் கடைத்தேருமலிருக்கிரும். ஆசாரியர்களுக்கிருக்க வேண்டிய லக்ஷணங்களிற் சிலவற்றை சொல்லுகிரும். சுத்தம், ஞானத்திலாசை, ஊக்கம் ஆகிய இக்குணங்கள் முக்கியமானவை. அசுத்த ஹிருதயமுடையவன் ஆசாரியனுகான். மனோவாக்குக் காயங்களாகிய திரிகரணங்களிலும் சுத்தம் வேண்டும். ஞானத்திலாசை யென்பது நம்முடைய பிரயத்தனத்தாலே உண்டாகக் கூடியது. எதில் நமக்கு அபேக்ஷையுண்டோ அதையே நாம் ஆசிரயிக்கிரும். மதக் கிரந்தங்களைப் படிப்பதனுலும் கேட்பதனுலு மாத்திரம் ஞானியாக முடியாது. ஒருநாள் இரண்டு நாள் ஒரு வருஷம் இரண்டு வருஷத்தில் இந்த ஞானத்தை யடையலாமென்றெண்ணக் கூடாது. எத்தனையோ ஜென்மங்கள் செல்லும். எப்போதும் ஞானத்தை ஸம்பாதிப்பதிலே திருஷ்டி கொள்ள வேண்டும்.

சில ஆசாரியர்கள் பாஷையில் நல்ல விற்பன்னர்களாய் வேத வாக்கியங்களிலுள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் மூன்று மைல் தூரம் அர்த்தம் சொல்லி தங்கள் தங்கள்

சாமர்த்தியத்தை விளக்குகிருர்களேயன்றி உண்மையாக ஞானத்தை யடையவேண்டிய விஷயங்களை யுபதேசிக்கிற தில்லை. இந்த பாண்டித்யத்தால் ஞானத்தையடைய விரும்பும் சிஷ்யனுக்கு யாதொரு பிரயோஜனமுமுண்டாகாது. முற்காலத்திலிருந்த பரமாசாரியார்களெல்லாம் வெகு இலகுவாய் வேதாந்த கிரந்தங்களை வியாக்யானம் செய்து பிரஜைகளுக்கு உபதேசித்தனர். இவ்வாறு செய்யாது சிலர் ஒவ்வொரு வார்த்தையையும் எடுத்து அது எந்தக் காலத்தில் யாரால் உபயோகப் படுத்தப்பட்டதென்றும் அதை உபயோகித்தவர் எந்த வருஷம் பிறந்தார், எப்போது இறந்தார், அவர் நக்ஷத்திரம் யாது, அவர் உட்கொண்ட ஆகாரம் என்னவென்று ஆலோசித்து நிர்ணயிப்பதுமா யிருக்கிருர்கள். இது புத்தி சாதுர்யமாயினும் ஆத்ம ஞானத்தை யுண்டாக்கக் கூடியதன்று.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஓர் கதை சொல்வதுண்டு. அதாவது, சில மனிதர்கள் ஓர் மாந்தோட்டத்திற்குட் சென்று அங்கேயிருக்கும் மரங்களையும் அவைகளிலுள்ள கிளைகள் பழங்களையும் எண்ணிக் கொண்டிருந்தார்கள். அவர்களெல்லோரிலும் புத்திசாலியான ஒருவன் தோட்டக்காரனை மெள்ளச் சினேகம் செய்துகொண்டு அவனிடமிருந்து பழங்களை வாங்கி யுண்டு பசி தீர்ந்தான். இதைப் போல் ஞானியானவன் பழங்களை கவனியாமல் ஆத்மாவொன்றையே நாடி சதா விசாரணை செய்கிருன். வீணை வாயாடிகள் காரியத்தில் உபயோகமற்றவர்களா யிருக்கிருர்கள்.

நீ பக்தனுயிருக்க விரும்பினுல் கிருஷ்ணன் எங்கே பிறந்தார் அவர் என்ன செய்தார், கீதையை எப்போது சொன்னுர் என்ற இச்சங்கதிகளைத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமேயில்லை. கீதையில் பக்தியும் ஆசையும் மட்டும் இருந்தாற் போதும். வித்வான்கள் பதங்களையும் அர்த்தங்களையும்

பற்றி விவாதம் செய்யட்டும். பக்தர்கள் பழத்தை யுண்ணட்டும்.

ஆசாரியர்களுக்குக் கிருக்கவேண்டிய மற்றொரு லக்ஷணம் பாபம் செய்யாமை. சிலர் அடியில் வருமாறு கேள்வி கேட்பார்கள். ஆசாரியன் பாவம் செய்தாலென்ன? புண்ணியம் செய்தாலென்ன? நாமேன் அவருடைய நடத்தையைக் கவனிக்கவேண்டுமென்பர். ஆசாரியன் குறை குணங்களைக் கவனியாமல் அவர் சொல்வதை மட்டும் கவனிப்போமென்பது தப்பு. இது சரியல்ல. ஏதேனும் ஓர் பூதிய சாஸ்திரம், அங்க கணிதம், பீஜ கணிதம் முதலிய நூல்களைக் கற்றுக்கொடுக்கும் ஆசாரியர்களானால் அவர்களின் நடத்தையைப் பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை. மத விஷயமான ஞானத்தை யுபதேசிக்கும் குருவிடம் பாபகாரியங்களிருக்குமாயின் நம்முடைய மனம் பக்குவமடையாது. அத்தகைய ஆசாரியர்களால் நாம் கெட்டுப்போவோமென்பது நிச்சயம். பாபியான ஒருவன் மதபோதனை செய்ய அருகனேயன்று. சுத்த ஹிருதயமில்லாத குருவும் சிஷனும் உபயோகமாகார்கள். ஹிருதயம் சுத்தமாயிருந்தாலன்றி பகவானுடைய அருள் உண்டாகாது. ஆதலின் மத விஷயத்தில் மட்டும் முதலில் ஆசாரியன் எப்படிபட்டவனென்று தெரிந்து பின்னர் அவன் உபதேசிப்பதைக் கவனிக்கவேண்டும். மதாசாரியன் பரிசுத்தனுயிருக்க வேண்டும். அப்போதுதான் அவனுடைய வார்த்தையைப் பிறர் மதிப்பார்கள்.

ஆசாரியன் ஏதோ ஓர் லாபத்தை யுத்தேசித்து உபதேசம் செய்யலாகாது. பணத்தையாவது பெருமையையாவது கீர்த்தியையாவது உத்தேசித்துக் கற்பிக்கும் ஆசாரியன் ஞானசாரியனன்று உலகத்தினிடம் கொண்ட பிரீதியாலும் கருணையாலும் மதாசாரியர்கள் பிரசங்கம் செய்யவேண்டுமேயன்றி ஓர் பொருளை யுத்தேசித்துச் செய்யலாகாது.

உன்னுசாரியனிடம் மேற்கூறிய மூன்று குணங்களுமிருந்தால் அவரிடம் நீ உபதேசம் பெறலாம். இக்குணங்களில்லையானால் உடனே அவனை விட்டு விலகவேண்டும். ஏனெனில் அவனால் உனக்கு நற்பழக்கம் உண்டாவிட்டாலும் துற்குணங்களுண்டாய்விடும். எவன் படித்தவனும் பாபமற்றவனும் ஆசையில்லாதவனுமிருக்கிறானே அவனே பிரம்மத்தை யறிந்தவன்.

மேற் கூறியவைகளால் நாம் அறியக்கூடியது யாதெனில் எல்லோரும் நமக்கு மதசாரியர்களாக ஏற்படக்கூடாதென்பதே. உலகத்திலுள்ள பெரிய மலைகளும் அருவிகளும் விருக்ஷங்களும் கடவுளின் மகிமையைக் காட்டுகின்றன வென்றாலும் குருடனயிருப்பவன் லக்ஷணமான வஸ்துக்களைக் கண்டு களிக்க முடியாததுபோல் குருவில்லாமல் கடவுளின் மகிமையை அறிய முடியாது. ஆதலின் ஆசாரியன் அவசியமென்றாயிற்று. பக்தி, வணக்கம், அடக்கம் முதலியவைகளை ஆசாரியரிடம் கொள்ளாமல் அவரால் நாம் கிருதார்த்தர்களாக ஒருபோதும் முடியாது.

இவ்வித நற்குணங்களமைந்த ஆசாரியர்களை யடையாமற்றான் அன்னிய தேசத்தவர்கள் ஆத்ம விசாரணை செய்யாமல் விட்டுவிட்டனர். பணம் கொடுத்தால் மதஞானமுண்டாய்விடுமென்பது அவர்களின் துணிபு. மகா ஞானமாகிய மதம் விலைக்கு வாங்கக்கூடிய பொருளா? புஸ்தகத்தினலடையக்கூடிய பதார்த்தமா? அல்லவல்ல. நீ உலகத்தில் மூலை மூலையாய் நுழைந்து பார். ஹிமவத் பர்வதத்திலெல்லாம் தேடு. கடலினுழத்தை கண்டுபிடி, கோபி முதலிய பெரிய வனாந்திரங்களிலெல்லாம் அலைந்து திரி. ஆத்மஞானம் உனக்கு உண்டாகாது. நீ ஆசைப்படும் வரை ஒரு குருவை யடையும்வரை உனக்கு ஆத்ம ஞானம் உண்டாகாது. கடவுள் தன்மை பொருந்திய ஆசாரியன் கிடைத்தால் அவருக்கு ஊழியம் செய். சகல தத்வார்த்தங்களையும் அறிந்துகொள்.

மேற் கூறிய குணம் அமைந்த ஆசாரியனது பெயர் வழங்குமிடங்களிலெல்லாம் பரிசுத்தமான ஸ்தலங்களே. அவரை ஸ்மரிக்கும் சிஷ்யன் பரிசுத்தனே. அப்படிப்பட்ட ஆசாரியர்கள் இவ்வுலகத்தில் அதிசொற்பமாயிருக்கின்றனர். எந்தவிடத்தில் இத்தகைய ஆசாரியனில்லையோ அது நரகமேயாம். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கீதையிற் கூறுகிறார் 'நானே குருவாயிருக்கிறேன் என்றறி' அதாவது என்னிடம் நீ குருவைக் காணுகிறாய் என்பது பொருள். இதனாலன்றோ குருவும் தெய்வமும் ஒன்றென்று பெரியோர் சொல்லுகின்றனர். மேற் கூறியவர்களுக்கு மேலாக ஈசுவராவதாரமான ஸ்ரீ கிர்ஷ்ணன் முதலியோர் நினைத்தமாத்திரத்தில் நம்மை ஞானிகளாய்ச் செய்துவிடுவர். அத்தகையோரைத்தான் நாம் கடவுளென்று வணங்க வேண்டும்.

பகவான் தசாவதாரங்கள் செய்ததற்குக் காரணம் ஜனங்கள் தம்மை நேரிற்கண்டு களித்து பக்தி செய்யட்டுமென்ற பரமகருணையினாலே யன்றி வேறல்ல. மனிதர்கள் ஈசுவரனை மனுஷ ரூபமாகப் பாவித்துப் பக்தி செய்வதுதான் சுலபமான வழி. நம்முடைய மனதானது மனிதனைவிடை உயர்ந்த ஓர் பிறப்பை நினைக்கத்தகாத நிலைமையிலிருக்கிறது. பரப்பிரம்மத்தை அதாவது அரூபியான கடவுளை நான் மனதால் ஸ்மரிக்கிறேனென்று வாயாற் சொல்லலாமே யன்றி அவ்வாறு செய்வது அஸாத்தியம். ஒரு பொருளை நாம் தியானிக்க வேண்டுமானால் அதற்கு ஓர் ரூபத்தைத் தரவேண்டியது அவசியம். பம்பாய், லண்டன் என்ற பட்டணங்களைப் பற்றி ஒருவன் சொல்லும் விஷயங்களை நாம் அறிய வேண்டி அப்பட்டணங்கள் இன்னமாதிரி யிருக்குமென்று நம்முடைய மனதில் நாம் ஒருவகை தோற்றமுண்டாக்குகிறோம். இவ்வகைத் தோற்றம் அல்லது ரூபத்தை மனதிலேற்படுத்தாமல் எந்த வஸ்துவையும் நினைக்க முடியாது. நீ என்னதான் தலைகீழாக விழுந்தாலும் கடவுளை மனுஷ்ய ரூபமாய்ப் பாவிக்காமல் ஒருபோதும் பக்தி செய்ய முடியாது.

சுவாமியாவது அவதாரம் செய்கிறதாவது என்று நீ ஆயிசுபரியந்தம் குதர்க்கம் செய்யலாம். ஆகிலும் பகவானை நீ மனுஷ்ய ரூபமாகப் பாவிக்காமல் பக்தி செய்ய முடியாது. பகவான் ஸர்வ வல்லமையுள்ளவர், ஸர்வ வியாபகி விக்கிரத்திலும் கல்லிலும் செம்பிலுமா இருக்கிருர் என்று சொல்லும் பிரஸங்கிகளைக் கண்டால் தைரியமாக 'ஐயா, கடவுளைப் பற்றி உங்களுடைய எண்ணமென்ன? என்று கேட்டால் பிரஸங்கியார் தட்டுக்கூடை முழி முழிப்பார்.

எருமை மாடுகள் ஈசுவரனைப் பஜிக்க வேண்டுமானுல் அவரை எருமையாகவே பாவிக்கும். மீன் பகவானைப் பிரார்த்தித்தால் பெரிய மீனுகவே நினைத்து வந்திக்கும். இதைப்போலவே மனுஷ்யன் கடவுளையோர் மனுஷ்ய ரூபமாக நினைப்பது ஸ்வபாவம். பகவானை யார் யார் எங்கெந்த ரூபமாய்ப் பாவிக்கிருர்களோ அந்தந்த ரூபமாய் அவர் காணப்படுகிருர். இதைவிட வேறு வழியில்லை.

இரண்டு வகை மனிதர்கள் கடவுளை மனுஷ்ய ரூபமாய்ப் பாவித்து வணங்குகிறதில்லை. மிருகத் தன்மையுள்ள மனிதர்கள், பரமஹம்ஸர்கள். பரம ஹம்ஸர்கள் திவ்யஞானிகளாகையால் அவர்களுக்கு எல்லாம் பரப்பிரமமாய்த் தோன்றுகின்றன. பரமஹம்ஸர்கள் கடவுளின் சரியான ரூபத்தைக் கண்டு தரிசிக்க வல்லவர்கள். ஸ்வாமியின் மகிமை தெரியாததால் மூடர்கள் அவரை வணங்குகிறதில்லை.

ஜீவன் முக்தர்கள் பிரம்ம ஞானிகளாதலின் மௌனியாயிருக்கின்றனர். இவ்விருவகையோரைத் தவிர மற்ற எவனுவது நான் வேதாந்தி, ஞானி, கோயிலுக்குப் போக வேண்டிய அவசியமில்லை' யென்ருல் அவனை மகாமூடன் என்று மதிக்க வேண்டும். அவன் வார்த்தையில் நம்பிக்கை

கொள்ளலாகாது. அவனுடைய பிரஸங்கத்தைக் கேட்பது பெருந்தப்பிதம். (இங்கு நாம் சொல்லக்கூடிய ஓர் விஷய முண்டு. தென்னாட்டில் சிலர் தங்களை வேதாந்திகளென் றும் தங்களுக்குப் பிள்ளை பெண்பேரில் பிரியமில்லை யென்றும், கோயில் குளம் அவசியமில்லையென்றும் பிதற்றித் திரிகின்றனர். இத்தகையோரை வஞ்சனையற்றவர்கள் மகா ஞானிகளென்று மதித்து மோசம் போகின்றனர். இன்னும் சிலர் செம்பைப் பொன்னாக்குவேன், ஆகாயத்திற் கிளம்பு வேன், ஸமாதியிலிருப்பேன், மந்திரம் செய்வேன், குட்டிக் கரணம் போடுவேனென்று தங்கள் வல்லமையைப் பிரமாத மாய்ச் சொல்லிக்கொள்வார்கள். இத்தகையோரை டம்பன் கூத்தாடிகள், ஜால வித்தைக்காரர்களென்று மதிக்க வேண்டுமே யல்லாது ஞானிகளென்றெண்ணலாகாது. வர்ணாசிரமதர்மங்களை வரவு செலவில் வைக்காமல் புகையிலை வெற்றிலை முதலியன வாயிலடைத்து விலாப்புடைக்கத் தின்று திரியும் சோம்பேறிகளைச் சன்னியாசிகளென்று மதிக்க லாகாது.)

ஈசுவரன் மனிதர்கள் பலவீனர்களென்பதை நன்று யுணர்ந்து அவர்களுக்கு நன்மை செய்யுமாறு மனுஷ்யாவ தாரம் செய்கிறார். "எப்போது புண்யம் அழிந்து பாபம் அதிகரிக்கிறதோ அப்போது நான் உலகத்தில் அவதாரம் செய்கிறேன். மூடர்கள் என்னை அவமதிக்கிறார்கள். எனது நிஜரூபம் அவர்களுக்குத் தெரிகிறதில்லை." என்று கிர்ஷ்ண பகவான் பகவத்கீதையிற் கூறியிருக்கிறார். ஸ்ரீராமகிர்ஷ்ண பகவான் கூறுகிறார்:—பெரிய அலை வரும்போது சிறு குழி களெல்லாம் ஜலத்தால் நிறைகின்றன. இந்தக் குழிகள் ஜலம் வேண்டுமென்று பிரயத்தினம் செய்கிறதில்லை. அதைப் போல் பரமாசாரியர் உலகத்தில் தோன்றினால் ஆத்ம ஞான மாகிற ஜலம் எங்கே பார்த்தாலும் நிறைந்து விடுகிறது.

பக்தியை அடைய வேண்டிய சில மார்க்கங்களைச் சொல்லுகிறோம். வேதாந்த சூத்ரங்களுக்குப் பாஷ்யம் செய்த ராமானுஜாசாரியர் கூறுகிறார். புண்ணிய பாவங்களின்னவையென்று பகுத்தறியும் சக்தி, ஆசைகளை யடக்கல், பழக்கம், யாகம், சுத்தம், பலம், அதிக சந்தோஷமில்லாமை ஆகிய இவைகளால் பக்தியை அடையலாம். ராமானுஜாசாரியரின் கருத்துப்படி விவேகம் என்பது சுத்த ஆகாரம் இன்னதென்றும் அசுத்த ஆகாரம் இன்னதென்றும் அறியும் சக்தியைக் குறிக்கிறது. அவருடைய அபிப்பிராயப்படி ஆகாரம் மூன்று விதத்தில் அசுத்தமாகிறது. (1) ஆகாரத்தின் சுபாவம், வெள்ளைப் பூண்டு முதலின. (2) அயோக்யர்களிடமிருந்தும் துஷ்டர்களிடமிருந்தும் கிடைப்பதால். (3) மண், மயிர் முதலிய விழுவதால். ஆகாரம் சுத்தமாயிருந்தால் ஸத்துவ குணம் விர்த்தியாகி ஞாபக சக்தி அதிகமாகும்.

பக்தர்கள் உணவைப் பற்றி மிகவும் கவனிக்கிறவர்கள். இவ்விஷயத்தில் சில பக்தர்கள் வெகு தூரம் போயிருக்கிறது ஒரு வேளை பிசகாலும் இது முக்கியமான விஷயமென்பதை எல்லோரும் தெரிந்து கொள்ளலாம். சாங்கியோபநிஷத்துப்படி ஒன்றாய்க் கலந்து கிடக்கும் ஸத்துவரஜஸ்தமோ குணங்கள் பிரகிருதியாகிப் பிறகு வெவ்வேறாய்ப் பிரியும்போது ஜெகமாகிறது. மேற்கூறிய மூன்றும் பிரகிருதியின் குணங்களாம். இம்மூன்று குணங்களாலேயே மனித ரூபம் உண்டாக்கப்படுகிறது. ஈசுவர விஷயமான ஞானமுண்டாவதற்கு ஸத்துவகுணம் மிகுதியாயிருக்க வேண்டும். நாம் உட்கொள்ளுகிற ஆகாரத்தால் நமது மனதின் நிலைமையும் குணமும் ஏற்படுகின்றன.

சுத்தமான ஆகாரத்தை யுட்கொள்ள வேணுமென்ற விவேகம் அவ்வளவு முக்கியமல்ல. மேற்கூறிய வாக்கியத்துக்கு சங்கராசாரியர் வேறொரு விதமாய் வியாக்யானம் செய்கிறார்.

ஆகாரம் என்பதற்கு உணவென்னும் பொருளைக் கொடாமல் வேறுவிதமான அருத்தம் செய்கிறார். அவருடைய கருத்துப் படி சேகரிக்கப்பட்டதெதுவோ அதுவே ஆகாரம். உணர்ச்சிகள் (சப்த உணர்ச்சிகள்) பஞ்சேந்திரியங்களுக்கு இன்பத்தை யூட்டும்படி சேகரிக்கப்பட்டிருந்தால் அவைகளை ஆகாரமென்னலாம். ஷை இந்திரியங்களால் நுகர்ந்த அறிவைச் சுத்தப்படுத்துவதே ஆகாரசுத்தம் என்று பொருள்படும். ஆதலின் ஆகாரசுத்தமென்பது பஞ்சேந்திரியங்களால் அனுபவிக்கும் உணர்ச்சிகளைப் பந்தமின்றிப் பயன்படுத்தி ஸத்துவ குணத்தை விர்த்தி செய்வது என்று பொருள். ஸத்துவ குணம் அதிகமானால் பகவானிடம் பக்தி பெருகும்.

இவ்விரண்டு வியாக்யானங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாஸப்படுகிறது போலிருந்தாலும் இரண்டும் உண்மையே. மாமிசத்தாலாகிய சரீரத்தை யடக்கியாள்வதைவிட மென்மை பொருந்திய மனோசரீரத்தை யடக்கியாள்வது கஷ்டம். மனதை யடக்குவதற்கு முதலில் சரீரத்தைச் சுகமான ஸ்திதியில் வைக்க வேண்டியதவசியம். வித்யார்த்தி முதலில் ஆகாரம் முதலியவற்றில் கவனம் வைக்க வேண்டும். ஆனால் அதற்காகத் திரைகட்டிக் கொண்டு ஒருவரையொருவர் பார்க்காமல் அவதிப்பட்டு போஜனம் செய்கிற வாடிக்கை அசட்டு வாடிக்கையே. இவ்விதமாய் ஆகார விஷயத்தில் உபயோகமின்றி அதிக சிரத்தைகொள்வது ஞானமுமல்ல, பக்தியுமல்ல, கர்மமுமல்ல. இது ஒரு பைத்தியம். இவ்விஷயத்தில் அடித்துக்கொண்டு சாகும் அறிவீனர்கள் பிரமலோகத்தை அடையாமல் பைத்தியக்காரர் சாலையை வாஸஸ்தானமாக அடையலாம். ஆகாரத்திலிருக்க வேண்டிய விவேகம் அவசியமாயினும் எல்லை கடந்து போகக்கூடாது. அதையே பிரதானமாயும் எண்ணலாகாது.

இந்திரிய நிக்கிரகம் செய்வதவசியம். இந்திரிய சேஷ்டை

யுள்ளவர்கள் பக்தர்களாயிருப்பதருமை. இந்திரியங்களை மனம்போனபடி விடாமல் புத்தியினிடம் ஸ்வாதீனப்படுத்தி அடக்கியாள வேண்டும். மனம் எப்போதும் பகவானையே தியானிக்க வேண்டும். முதலில் இவ்வாறு செய்வது சற்று கஷ்டமாயிருக்கும். பழக்கத்தினாலும் ஆசையின்மையாலும் பகவானிடமே நம்முடைய மனதை வைப்பது ஸாத்திய மாகும் என்று ஸ்ரீகிர்ஷ்ணன் கீதையிற் சொல்லியிருக்கிறார்.

பக்திக்கு முக்கிய ஆதாரம் ஆசாரமாயிருப்பதே. ஆசாரமாயிருப்பதென்றால் சுத்தமாயிருப்பதென்றருத்தம். தேகத்தை சுத்தமாய் வைத்துக்கொள்வதும் ஆகாரத்தைப் பார்சீலனை செய்து பின்னருண்பதும் பக்திக்கு அவசிய மானவை. மனம் சுத்தமின்றி வெளியாசார மட்டும் பிரயோ ஜனப்படாது. இராமாநுஜாசாரியரால் ஆசாரத்தின் பொருட்டு இருக்க வேண்டி கணக்கிடப்பட்ட குணங்க ளாவன :—" ஸத்தியம். அதாவது உண்மையே பேசுவது, நன்றியறிதல், தயை அதாவது பிரத்தியுபசாரத்தை வேண் டாமல் பிறருக்கு உபகாரம் செய்வது. அஹிம்ஸை அதாவது செய்கையாலும் சொல்லாலும் ஒருவருக்குத் தீங்கு செய்யா திருத்தல் (உலகத்திலுள்ள ஸர்வப் பிராணிகளுக்கும் யாதொரு ஹிம்ஸையும் செய்யாதிருத்தல் உன்னதமான குணம்). ஒருவன் சொத்தைக் கண்டு பொறாமை கொள் ளாமை. ஒருவன் செய்த உபத்திரத்தை அடிக்கடி நினைத்துக் கொண்டு அவதிப்படாமை, வீணான எண்ணங்களெண் ணாமை, மேற்கூறிய குணங்களில் அஹிம்ஸை யென்பதே சிறந்தது. சிலர் மனிதனை மட்டும் ஹிம்ஸிக்கலாகாதென்றும் மிருகங்களை மென்று தின்னலாமென்றும் நினைக்கிறார்கள். இது சுத்தப் பிசகு. இன்னும் சிலர் நாய், பூனை, பசு, காக்கை முதலிய ஸாது மிருகங்களைச் சம்ரக்ஷித்து புலி. கரடி முதலிய துஷ்ட மிருகங்களை ஹிம்ஸிக்கலா மென்கிறார்கள். இராமா நுஜாசாரியரோ எந்தப் பிராணியையும் ஹிம்ஸை செய்ய

லாகாதென்று கூறியிருக்கிறார். (எதிலும் மிதமிருக்க வேண்டும். பிராணிகளை ஹிம்ஸிக்கலாகாதென்னும் கருத்துடன் சில சன்னியாஸிகள் ஸ்நாநம் செய்கிறதில்லை. ஏனெனில் தேகத்திலுள்ள பூச்சிகளெல்லாம் நாசமாய் விடுமென்பது அவர்களின் அபிப்பிராயம். இவ்வாறு ஸ்நாநம் செய்யாமல் தங்கள் சரீரத்தை நாற்றமெடுக்கச் செய்து அதனால் எத்தனையோ பேர்களுக்கு நோயைக் கொடுக்கிறோமே யென்னும் ஞானம் மேற்படி ஸன்யாசிகளுக்கில்லை.)

அஹிம்ஸைக்கு ருஜு யாதெனில் பொறுமையில்லாதிருத்தலே. ஸமயம் வாய்க்கும்போதும் நிர்ப்பந்தம் உண்டானபோதும் எந்த மனுஷ்யனும் நன்மையைச் செய்ய முன் வருவான். (திப்பு சுல்தான் சுபாவத்தில் இந்துக்களை ஹிம்ஸித்தாலும் ஆங்கிலேய சைனியத்தால் சூழப்பட்டு ஸ்ரீரங்கபட்டணம் அவர்கள் வசம் போய்விடும் நிலைமையில் வந்தவுடன் இந்து வைதீகர்களுக்கு எதேஷ்டமாக தான தர்மங்கள் செய்தான். இந்த நன்மை கட்டாயத்தின் பேரிற் செய்ததன்றோ? சிலர் மூட பக்தியினால் தானம் செய்கின்றனர். சிலர் உபாத்தியாயர்களுடைய உபத்திரவம் பொறுக்க மாட்டாமல் தர்மம் செய்கின்றனர். ஜனங்களிடம் உண்மையான விசுவாஸம் கொண்டவன் யாரிடமும் பொறுமை கொள்ள மாட்டான். இதுவே அவனுடைய உத்தமமான லக்ஷணம். உலகத்திலுள்ள பெரிய மனிதர்கள் சிற்சில காலங்களில் கீர்த்திக்காக ஒருவர் மேலொருவர் பொறுமை கொள்வதுண்டு. இம்மாதிரி பொறுமையிருக்குமளவும் அஹிம்ஸை யென்னும் சிறந்த குணம் அவர்களுக்குண்டாகாது. பசு மாடு இறைச்சியைத் தின்பதில்லை. ஆடு மாம்ஸங்களைப் புசிக்கிறதில்லை. இவைகள் பெரிய யோகிகளா? அஹிம்ஸை யென்னும் குணம் வாய்ந்தவைகளா? இதைப் போலவே ஓர் முட்டாள் நான் முருங்கைக் காயைத் தின்ப

தில்லை. முள்ளங்கியை விழுங்குகிறதில்லை. மாம்ஸம் புசிக்கிறதில்லை யென்று சொல்லிக்கொள்வான். அதனால் மட்டும் அவன் யோகியாகான். அவன் யோகியானால் ஆடு மாடுகளும் யோகிகளாக வேண்டுமன்றோ? கைம் பெண்களையும் சிறு குழந்தைகளையும் சோற்றுக்குப் பறக்கடித்து அவர்களுடைய ஆஸ்திகளை வாயிற்போட்டுக் கொண்டு நான் சாஸ்திரி, யாகம் செய்த தீக்ஷிதன், ஜோஸ்யன், பெரிய தேகி, புராணிகன், என்று கூறுவது அறிவீனமே. எந்த மனுஷியன் பிறரை வஞ்சித்து பணத்துக்காக தீச்செயல்களைப் புரிந்து வாழ்கிறானோ அவன் பாபியே. அப்படிப்பட்டவன் புல்லைத் தின்று ஜீவித்தாலும் யோகியாகான். அவன் மிருகமேயன்றி மனிதனல்ல. ஒருவருக்குத் தீங்கு செய்ய வேண்டுமென்று மனதால்கூட நினைக்காதவனெவனோ, தன் ஜென்ம விரோதியாயினும் அவன் க்ஷேமப்படுவதை நோக்கி எவன் ஸந்தோஷம் கொள்ளுகிறானோ அவனே மகா யோகி, மகா பக்தன். அவன்தான் எல்லோருக்கும் ஆசாரியன். அப்படிப்பட்டவன் பன்றி மாமிசத்தைத் தின்றாலும் அவன் பெருமை குறையாது. ஆதலின் தேக சுத்தமும் ஆசார நேம நிஷ்டைகளும் மனோசுத்தத்துக்கு ஸாதகங்களென்று மாத்திரம் நாம் கொள்ள வேண்டியதே யன்றி அவைகளே போதுமானவை யென்றெண்ணலாகாது. வெளி யாசாரத்தை மட்டும் தழுவி மனோசுத்தத்தைக் கவனியாதவன் கடைத்தேற மாட்டான்.

பக்தி யோகத்தை அடைவதற்கு இன்னொரு வழி யாதெனில் சரீரபலம். பலஹீனர்கள் ஆத்மாவை அடைய முடியாது, என்று வேதம் முறையிடுகிறது. இவ்வாக்கியத்தில் தேக பலம் மனோபலம் இரண்டையும் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறது. நல்ல பலமும் ஊக்கமுமுள்ளவர்களே தக்க மாணாக்கர்கள். சிறிய உருவமும் மெலிந்த தேகமுமுள்ளவர்களால் என்ன பிரயோஜனமுண்டாகும்? யோகம் செய்யும்

போதே அவர்கள் கண்கால் தெறித்து சின்னபின்னமாவார்கள். இளமையும், தேக ஸௌக்கியமும், திடகாத்திரமும் யோகத்துக்கு அவசியமானவை. ஆதலின் பக்தர்களுக்கு சரீரவன்மை அவசியமாயிருக்க வேண்டும். இந்திரியங்களை யடக்கியாள்வது பலவீனர்களாலாகக்கூடிய காரியமல்ல. எவன் பக்தியோகம் செய்ய வெண்ணுகிருனோ அவன் பலிஷ்டனாயிருக்க வேண்டும். பக்தர்களுக்கு சரீராரோக்கியம் அவசியமானது. மிகவும் மெலிந்த தேகிகள் யோகாப்பியாஸம் செய்யத் தொடங்கினால் தீராத நோயையாவது பலமற்ற மனதையாவது அடைகின்றனர். வேண்டுமென்று தேகத்தை இளைக்கப் பண்ணுவதால் ஆத்மஞான முண்டாகமாட்டாது. பக்தியோகத்தைச் செய்பவன் உற்சாகமுள்ளவனா யிருக்க வேண்டும். சிடுமூஞ்சிகள் பக்தி செய்ய அருகர்களன்று. மேல் நாட்டில் வயது சென்று தாடை விழுந்து கண் குழிந்து நெற்றி சுருங்கி எலும்பு தோன்றும்படி இளைத்துப்போனவர்களுக்குத்தான் மத விஷயமான ஞானமுண்டென்று மதிக்கிற வழக்கம். இத்தகைய ஞானிகளைக் கோயிலிலும் மடத்திலும் வைக்காமல் வைத்தியர்களிடம் கொண்டு போவது நன்று.

மனோற்சாகமுடையவர்களே பக்தி செய்யக்கூடும். பலமான ஹிருதயமுடையவர்கள் அஸாத்தியமான காரியங்களையும் செய்து முடிப்பார்கள். வைரத்தைப் போன்ற மனதையுடைய மகான்களே மாயையைக் கடந்து செல்வர்.

ஆனால் அதிகமான மகிழ்ச்சி கொள்வதும் கூடாது. ஸதா சிரித்து விளையாடுவோன் அருமையான காரியங்களைச் செய்தலரிது. மனோபலம் மட்டற்ற மகிழ்ச்சியால் வீணாகக் கழிந்துபோம்.

மோக்ஷத்துக்கான மார்க்கங்களை யெல்லாம் பக்தர்கள் அலக்ஷியமா யெண்ணார்கள். சிலர் ஓரேயொரு மூர்த்தியை

வணங்குகிறார்கள். இது நல்ல காரியம்தான். இவ்வாறு பக்தி செய்கிறவர்கள் நாளடைவில் தாம் வணங்கும் மூர்த்தியே பற்பல மதஸ்தர்களால் வெவ்வேறு ரூபங்களாகப் பாவித்து வணங்கப்படுகின்றது என்று தெரிந்துகொள்வார்கள். பக்தர்கள் புறமதஸ்தர்களையும் அன்னிய தேசத்தாரின் ஆசாரங்களையும் அலக்ஷியம் செய்யலாகாது. குறித்த ஓர் மூர்த்தியினிடமுள்ள பக்தியினால் மற்ற மூர்த்திகளை நிந்திக்கலாகாது. பகவான் ராமானுஜர் சொல்லுகிறார் "மனதைப் பிரம்மமாக நினைத்துப் பஜனை செய். ஆகாசத்தைப் பிரம்மமாக நினைத்து ஸ்தோத்திரம் செய். மனதும் ஆகாசமும் பகவானுடைய பிரதிமைகளாக நினைத்து நாம் வணங்க வேண்டுமாம். சூரியனே பிரம்மம். இது ஆக்ஞை". இந்தப் பிரகாரமாக 'நாமமே பிரம்மம்' என்ற வாக்கியங்களில் ஆராதனையின் பொருட்டு ஸந்தேக முண்டாகிறதென்று சங்கரர் கூறுகிறார்.

இவ்வித பிரதிகாராதனையில் பிதிராராதனையும் தேவதாராதனையும் அடங்கியிருக்கின்றன. ஈசுவரனையாராதிக்கிறதே பக்தியாகும். தேவதைகளையும் பிதிர்க்களையும் வணங்குவது பக்தியாகாது. பற்பலதேவதைகளை நாம் வணங்குவது கர்ம யோகமாம். மேற்கூறிய தேவதைகளை வணங்கினால் சொர்க்க போகமட்டும் கிடைக்குமேயன்றி பக்தியாவது முக்தியாவது கிடைக்க மாட்டாது. பிரதிகாராதனையைச் செய்வதால் ஆத்மாவைத் தரிசித்ததாக நினைக்கக் கூடாது. ஸரஸ்வதியை யுபாஸிக்கிறவன் வித்தையை மட்டுமே யடைவான். வருணனை யுபாசிப்பவன் மழையை மட்டுமடைவான். ஈசுவரனை யுபாஸிப்பவன் மோக்ஷத்தை யடைவான். நாமத்தையும் ரூபத்தையும் நீக்கிப் பார்த்தால் ஒவ்வொரு வஸ்துவும் பிரம்மமேயாகும். ஆதித்தியனைப் பூஜிப்பதுகூட மோக்ஷத்தைக் கொடுக்குமென்று சங்கரர் பிரம்மஸூத்ர பாஷ்யத்திற் சொல்லியிருக்கிறார்.

திருநாகேசுவரம் கம்ப ஆட்டம் 1898

கும்பகோணத்திற்கு கிழக்கு மூன்று மைல் தூரத்தி லுள்ள திருநாகேசுவரம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய ஸ்ரீநாகநாத சுவாமி திரு ஆலயம் கீழ்கோபுரம் ஐந்து அங்கனமுள்ளது. அதின் சிகரத்தின் கலசத்திற்கு சற்று கீழ் 70 அடி கொண்ட நீண்ட ஜய ஸ்தம்பத்தை நட்டு அது சாயாமலிருக்கத் தக்கதாக சுற்றிலும் கயிறுகள் பெலங் கொண்டு கட்டி கீழ் பூமியில் ஆதாரமாயுள்ள விருக்ஷங் களிலும் கோயில் கம்பங்களிலும் அக்கயிற்றின் நுனியை முடிந்திருந்தார்கள். கம்பத்தின் உயரத்தையும் பூமியையும் ஒருவாறு கணக்கிட்டுப் பார்த்ததில் 65 கஜத்திற்குக் குறை யாதென தெரிய வந்தது. அவ்வளவு உயர்ந்த கம்பத்தி னுச்சியில் இம்மாதம் 2ந் தேதி பல அற்புத விளையாட்டுகள் நடிக்கப்போவதாய்ப் பிரசித்தம் செய்த பத்திரிகைப் பிரகா ரம் ஆட்டம் துவங்கினார்கள்.

இதைக் கண்டானந்திக்க முப்பது மைல் தூரத்திலிருந் தும் வெகு ஜனங்கள் குறித்த தினத்திற்கு ஒரு தினம் முந்தியே வந்து சேர்ந்தார்கள். அப்போது ஒரு சிறு மகாமக மென மதிக்கத்தக்க அவ்வளவு பெரிய கும்பலாயிருந்தது. போலீஸ் சப்-மாஜிஸ்ட்ரேட், தாசில், சப்-கலெக்டர் முதலிய அதிகாரிகளின் பாதுகாப்புக்கும் குறைவில்லை. சுகாதாரத் துக்குரிய சில ஏற்பாடுகளும் செய்திருந்தன. சில ஜனங்கள் நல்ல விடத்திலிருந்து பார்ப்பதற்கு ஜன நெருக்கத்தின் தொந்தரவால் ஒண்டக்கூட முடியாமல் போய் விட்டது. அத்தகையவர்கள் கால் மைல் தூரத்தில் நின்று வேடிக்கை பார்க்க நேர்ந்தது. கம்பத்தின் உயரத்தால் எங்கு நின்றாலும் தெரியும். கிட்ட இருந்து பார்ப்பது விசேஷ மல்லவா?

குறித்த நாழிகையில் ஆட்டம் ஆரம்பித்தார்கள். அந்த ஆட்டங்களெல்லாம் அபூருவமாயிருந்தாலும், சர்க்கஸ் கம்பெனியில் காசு கொடுத்துப் பார்க்கும் ஆட்டங்களைப் போல்தானிருந்தது. பிறகு 4, 5 முக்கிய ஆட்டங்களாவன :—

கம்பத்தைக் கட்டி இழுத்து கீழே கட்டியிருக்கும் கயிற்றில் உயரமாகவிருந்து ஒருவன் தலைமயிரை மேல் சொல்லிய கயிற்றில் கோர்த்திருந்த சிறு குழாயில் கட்டி எவ்வித பிடிப்புமின்றி கீழே இறங்குவது.

கம்பத்தின் உச்சியில் ஒருவன் காற்றாடியைப் போல் சுற்றுவது.

இருவர் இன்னொரு விதமாய் ஜதையாய் சுற்றுவது.

உரியில் மூவர் சர்ப்பத்தைப் போல் நெளிந்து தொங்கி வருவது.

கடைசியில் ஐந்து வயது பாலகனை இரண்டு முழமுள்ள மாத்திரைக் கோலென்னும் ஓர் கவை வைத்த கொம்பில் மல்லாக்கப் படுத்து வளையச் செய்து அப்படியே ஒருவன் ஒரு கையினால் தூக்கி முகத்திற்கு நேராய் உயர்த்தி கோலைத் தட்டிக் குழந்தையைப் பிடிப்பது.

இவ்வாச்சரிய வேலைகளை ஆரம்பிக்க முயலும் தருணத்தில் ஆகாசத்தில் மப்பும் மந்தாரமும் கண்டதோடு காற்றும் சம்பவித்ததினால் ஆட்டக்காரர்கள் மனங் கலங்கி காற்றேனும் நிற்கட்டுமெனக் கருதி கம்பத்தை விட்டு கோபுரத்தின சிகரத்தில் பத்து பேர் வரையும் உட்கார்ந்து அரை மணி வரையும் பார்த்தும் காற்று நில்லாமையாலும், மாலை நேரம் மறையும் தருணமாயிருந்தமையாலும், லட்சக் கணக்கான ஜனங்

கள் கலையை ஆரம்பித்ததை ஆட்டக்காரர்கள் அறிந்து தொட்ட வேலையைச் சட்டென முடித்துவிடலாமென குழந்தையை மாத்திரைக் கோலில் வைத்துத் தட்டும் ஓர் ஆட்டத்தை யேனும் காட்டிவிடலா மென்று கம்பத்தில் ஐந்து வயது குழந்தை மாத்திரைக் கோல் சகிதமாய் கம்பத்தில் பாதி தூரம் ஏறிப் போய்க் கொண்டிருக்கும்போது சற்று காற்றும் மழைத் தூற்றலும் கண்டது. இதனால் ஆட்டக்காரர்களுக்கு அபாயம் நிகழுமென யாவரும் அண்ணாந்து பார்த்த வண்ண மாயிருந்ததையும் ஆட்டத் தலைவனுக்கு துர்ச்சகுனம் கண்ட தினாலும் நாளை மூன்று மணிக்கு பாக்கி வேலையைக் காட்ட லாமென கம்பத்திலிருந்தபடியே ஜனங்களுக்கு சைகை காட்டி கீழே இறங்கி விட்டார்கள்.

பலத்த மழைக் காதாரமாகிய மப்பு வானத்தில் மிகுந் திருந்தபடியால் தூரத்து ஜனங்களெல்லாம் ஓட்டம் பிடித்து விட்டார்கள். எல்லாம் போக மறுதினம் ஆட்டத்தைப் பார்க்க தங்கிய ஜனங்கள் நான்கில் ஒன்றுதான். மறுதின மாகிய 3ந் தேதி ஆட்டக்காரர்களெல்லாம் சந்தோஸ முக மலர்ச்சியுடன் சகல ஆட்டங்களையும் குறைவின்றி நடித்து சகல ஜனங்களும் ஆனந்த பரவசமாகும்படி செய்தார்கள். கேட்பவருள்ளம் திடுக்கிடத்தகும் இவ்வாட்டத்தைப் பார்க்க பல உயர்தர உத்தியோகத்தை யடைந்த ஆங்கிலேய சிகா மணிகளெல்லாம் வந்து ஆவலுடன் ஆட்டத்தின் காக்ஷிகளைக் கண்டு மெய்மறந்து போனார்கள்.

முதல் தினம் ஆட்டம் அவ்வளவாக சிலாகிக்கக்கூடிய தல்ல வாயினும் பூமி மட்டத்திற்கு 65 கெஜம் உயரத்தில் உலக்கை பருமத்திலுள்ள கம்பத்தின் உச்சியில் நிராதரவா யிருந்து ஆடினது மட்டும் பயத்தையும் ஆச்சரியத்தையும் உண்டு பண்ணாமல் போகாது. 2ந் தேதி ஆடிய ஆட்டமே

போதுமானதென்று சந்தோஷித்து தங்கள் தங்கள் ஊர் சேர்ந்த ஜனங்கள் 3ந் தேதி ஆடிய அற்புத விளையாட்டைக் கேள்விப்பட்டு நமக்குப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே யென்று விசனமுறுகிறார்கள். பம்பாய் ராஜதானியிலிருந்து நம் ராஜதானிக்கு வரும் சர்க்கஸ் ஆட்டக் கூட்டத்தார்களின் வேலைத் திறமை இங்கிலாண்டு வாசிகள் மெச்சக்கூடிய தென்றால், பிரஸ்தாப ஸ்தம்ப விளையாட்டை விண்ணுலகத் தார்கூட வியப்புறத் தடை என்ன?

இவ்வளவு பெருமையை இவர்கள் பெற்றது இவர் களின் இஷ்ட தெய்வமாய் விளங்கும் ஸ்ரீ காமாக்ஷியம்மா ளுடைய கடாக்ஷ வீக்ஷணியத்தால்தான். ஆட்ட தினத்திற்கு சில தினங்களுக்கு முந்தி அம்பாளுடைய வரப்பிரசாதம் பெற வேண்டி வெகு பயபக்தியுடன் பூஜைகள் செய்து அதின்மேல் ஆட்டம் நிச்சயிக்க சில அடையாள சம்பவங்கள் நிகழ்ந்தாலொழிய ஆரம்பிப்பதில்லையாம். வழக்கப்படி இப் போதும் பூஜைகள் முடித்து அனுகூலமான குறிகளை யறிந்துதான் ஆரம்பித்தார்கள்.

இவ் வாட்டம் மூன்று மாதத்திற்கு முன்னமே நடக் கிறது, காற்று அதிகமாய் வீசியதால் தடைப்பட்டிருந்து இப் போது முடிவு பெற்றது. ஆட்டக்காரர்களின் கூட்டம் முப்பது பெயரும் மூன்று மாச காலமாய் இவர்கள் கைக்காசு ஒரு பைசாகூட செலவில்லாமல் துணி நெசவுகாரர்களின் பொது செலவிலேயே சாப்பிட்டு வந்தார்களாம். கைக்கள வர்கள் மட்டுந்தானு இவர்களுக்கு சாப்பாடு முதலியவைகள் செய்து வைக்க வேண்டுமென்றால், ஆட்டக்காரர்கள் முழு தும் நெசவுக்காரர்களின் ஜாதிப் பிள்ளைகளாம். இவர்கள் இதர ஜாதியாரிடம் யாதொரு சன்மானமும் பெறலாகா தாம். இவர்கள் காலக்ஷேபத்திற்கு வேண்டிய வருவாயுள்ள பல நகரங்களுண்டு. அந்நகரங்களில் நெசவுக்காரர்களே விசேஷமாயுண்டாம்.

கலி காலத்தில் பல வற்புதங்கள் விளைவித்த மகான்களாகிய சமயாசாரியர்களின் திருவாக்கால் பாடப்பட்ட க்ஷேத்திரங்களில் மட்டுந்தான் ஆடுவதாம். கோபுரம் சிறிதாயிருந்தால் பெரிய விருக்ஷங்களில் 70 அடி கம்பத்தைக் கட்டி ஆடுவதாம். அடுத்தடுத்து ஒரு ஊரில் ஆடுவதில்லை. இப்போது ஆடிய திருநாகேசுவரத்தில் இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன் ஆடியதற்கு இப்போது ஆடியிருக்கிறார்கள். இதைப் போல்தான் மற்ற ஊர்களிலும் ஆடுவார்களாம். இவர்களுக்கு காஞ்சிபுரம்தான் வாசஸ்தலம். திருநாகேசுவரத்திலுள்ள நெசவுத் தலைவரின் பெருமுயற்சியால் ரூபாய் 1500 வரை சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். மாத்திரைக் கோலில் தாங்கி நின்ற அழகுள்ள குழந்தைக்கு ஆபரணங்களும் மற்றவர்களுக்கு வஸ்திர முதலிய வெகுமதியுமளித்ததாய் சமாசாரம்.

சமாசாரம் நிற்க, பிரபலம் பொருந்திய இவ்வாட்டம் பார்க்க வந்த ஜனங்களில் சிலருக்கு நடந்த கஷ்டநஷ்டங்களை கேள்விப்பட்ட மட்டில் கூறுகிறோம். கேளுங்கள், முதல் தினம் ஆட்டத்தன்று திருநாகேசுவரம் ஆலயத்திற்குள் புது செங்கல் அடுக்கி யிருந்ததன்மீது அதிக ஜனங்கள் ஏறி கீழே நின்ற ஸ்திரிகளுக்கு பல இடஞ்சலை விடுவித்ததால் சில போலீஸ் அதிகாரிகள் செங்கல் மேல் நின்ற ஜனங்களை இறங்கும்படி கட்டாயப்படுத்த அதின்மேல் ஜனங்கள் அவசரத்துடன் தடபுடலாய் இறங்கியதால் ஒரு பாகத்துக் கல் சரிந்து இருபது வயதுள்ள மங்கிலிய ஸ்திரீ உடனே மரித்தாள். 4, 5 பெண்களுக்குக் காயம். கூட்டம் கலைந்து திரும்புகையில் ஓர் வண்டி மாடு மிரண்டு அநேக ஜனங்களை தும்சப்படுத்தி 40 வயது சுமாருள்ள ஓர் விதவை பிராமண ஸ்திரீயின் கை ஒடிந்து போய் விட்டது. அன்று ஜனங்கள் இரவு 12 மணி வரையும் ரஸ்தாவில் நடமாட்டமாயிருந்தது.

*

இரண்டு பட்டு நூல்கார ஸ்திரீகளும், இரண்டொரு பட்டு நூல் செட்டிகளும் ஒரு மணி சுமாரில் தனித்து வந்ததில் கொடிய திருடர்கள் எதிர்த்து கழுத்து ஆபரணங்களையும் காது கம்மல்களையும் அறுத்துக் கொண்டோடி விட்டார்கள். காதறுந்த மாது ஒருத்திதானும். அவள் 3ந் தேதி கும்ப கோணம் ஆஸ்பத்திரியில் காதை ஒட்டி வைத்தார்களாம்.

திருநாகேசுவரம் கம்ப ஆட்டம்

"சஜ்ஜன பத்திரிகை"க்கு 'கண்ணுற்றோர்' ஒருவ ரெழுதுகிறார்:—

"கும்பகோணத்திற்கு மூன்று மைல் தூரத்திலுள்ள திருநாகேச்வர மென்பது பாடல்களிலுள்ள ஒரு பெரிய க்ஷேத்திரம். அதில் இருபது வருஷத்திற்கு ஓர் தடவை கோபுரத்தின் மேல் 64 அடி கம்பம் ஒன்று நாட்டி பிரார்த் தனைக்காக அதிலேறி விளையாடுவது வழக்கம். அது இம் மாதம் 2ந் தேதி பகல் இரண்டு மணிக்கு கைக்களவ ஜாதி யாருக்குக் குலதெய்வமான காமாக்ஷியம்மனிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு கம்பத்தின் மேலே ஏறினார்கள். அங் குள்ள காமாக்ஷியம்மன் சன்னிதானத்தில் ஏராளமான பள்ளயம் போட்டதோடுகூட இரண்டு குடம் சுத்த ஜலத் தில் மிக ஜோதியான தீபங்கள் எரிந்து கொண்டிருந்தன. அதுதான் அவர்களுக்கு உத்தரவு கொடுத்ததற்கு அடையாள மாம். அவர்கள் கம்பத்தின் மேல் மிக அற்புதமான விளை யாட்டுகளை செய்து காண்பித்துக் கொண்டிருக்கையில் வருண னும் வாயுவும் கவர்ந்து கொண்டபடியால் துவக்கிய விளை யாட்டை அன்று நிறுத்திவிட்டு மறுநாள் விளையாடிக் காண் பித்தார்கள்.

'இதைப் பார்க்க சுமார் 4 லட்சம் ஜனங்கள் வந்திருக்க லாம். அதிகாரிகள் ஜனங்களை பண்ணின இம்சையால் ஒரு பெருஞ்சுவர் இடிந்து விழுந்து ஒரு கொலையும் சிலர் குற்று

யிரும் கொலையுயிருமாய் கிடக்க நேரிட்டது. வந்திருந்த கூட்டத்திற்கு காவல் காக்க போலீஸ் போதுமானதல்ல. அன்றைய தினம் இப்பக்கங்களில் உள்ள ஸ்கூல்களும் ஆபீஸ் களும் மூடப்பட்டன. இரவு 7 மணியானதும் வருணன் வர கொள்ளைக்காரர்கள் வழியில் வரும் ஜனங்களை இம்சை செய்து காது மூக்கை யறுத்து ஆபரணங்களை அபகரித்துக் கொண்டுபோய் விட்டார்கள்.

"மறுநாள் பகல் இரண்டு மணிக்கு கம்பத்தின்மேல் ஏறி மிக அற்புதமாய் விளையாடிக் காண்பித்தார்கள். இதில் மாத்திரைக்கோல் தட்டும் வேலையும், கூடு விட்டுக் கூடு பாய்ந்ததும், வட்டஞ் சுற்றியதும், குழந்தை கயிற்றில் வந்த தும் மிக ஆச்சரியமாயிருந்தது. இதில் சில அருமை தெரியாத பாவிகள் அலக்ஷியம் செய்ததோடுகூட அவதூறும் பேசி னார்கள். பிள்ளையின் பெருமை பெற்றவளுக்குத் தெரியும், வேலையின் அருமை தொழிலாளிக்குத் தெரியும்.

'இதில் சில கனவான்கள் போலீஸ் பந்தோபஸ்துடன் ஏராளமான இடத்தை அடைத்துக் கொண்டு வேடிக்கை பார்த்து விட்டு கடைசியில் கம்பத்தில் விளையாடின 4 வய துள்ள குழந்தையைக் கூட்பிட்டு ஒரு கிச்சிலிப் பழத்தையும் ரூபா இரண்டையும் குழந்தை கையில் கொடுத்து உபசார மான வார்த்தை சொன்னார்கள். இப்படிக்கு இவ்வளவு அபூர்வமான வேலைகளை செய்த குழந்தையிடத்தில் ரூபா இரண்டு கொடுத்தது கர்ணன் கொடையே! ஒரு பிரபு அல்லது ஒரு அரசன் இருந்திருந்தால் எவ்வளவோ தனத் தைக் கொடுத்திருப்பார். கம்பத்தில் விளையாடினவர்களையும் அக் குழந்தையையும் ஜகதீசுவரி காமாட்சியம்மன் காப்பாற்றி வர வேண்டுமென்பது எமது பிரார்த்தனை."

—'சுதேசமித்திரன்'

6 & 20—9—1898

பர்மா விசேஷங்கள்

சாமியப்பன், அம்மாப்பேட்டை

பர்மாக்காரரின் ஆலயம் அல்லது பய்யாகோவில்

இவ்வாலயம் பார்க்கத்தக்கது. பூமி மட்டத்திலிருந்து சுமார் கால் பர்லாங்கு உயரத்துக்கு மேல் கட்டடம் வெகு சிறப்பாய் அமைந்துள்ளது. ஏறிப் போகப் படிகள் கருங் கல்லினால் ஒழுங்காகக் கட்டப்பட்டு சில படிகள் கடந்தபின் சொற்ப தூரம் சமதரையும் ஆங்காங்கு வழியின் இரு பக்கத் தில் உட்கார்ந்து களைப்பார சாய்மான பெஞ்ச் போடப்பட் டும் படிகளும் சமதரைகளும் மாறியிருக்கின்றன.

ஆலயத்துள் பிரவேசித்தால் நம் இந்து தேவாலயங்களில் 108 சிவலிங்கம், 63 நாயன்மார்கள், சில்லரைத் தெய்வங்களுக் குத் தனித் தனித் துண்டுக் கட்டடம் அமைத்து இருப்பது போல, சுமார் 30 பெரிய கட்டடங்கள் பிரகாரத்தைச் சுற்றி லும் கட்டப்பட்டிருக்கின்றன. கோவிலானது சதுரமாயிரா மல் வட்டமாயும் உயரமாயும் அமைக்கப்பட்டிருக்கின்றது. நம்மிந்தியக் கோயில்களில் விக்கினேஸ்வரர் சந்நிதி, நடராஜர் சந்நிதி போல் அதிலுள்ள மண்டபங்கள் சாதாரணச் செல வில் கட்டப்பட்ட கட்டடம் போன்றதல்ல. அவைகளை அதிகச் செலவில் மகாராஜாக்களால் கட்டப்படக்கூடிய அழகிய சிருங்கார மண்டபம் என்றே சொல்ல வேண்டும். முத லாவது, மண்டபத்தைப் பார்த்தால் கட்டடம் கட்டப்பட்ட காலத்தையாவது, அதற்குப் பிடித்திருக்கும் செலவையாவது அற்புதமான நாகரீகமாகக் காட்டி இருப்பதைப் பார்க்கும் போது இந்நாகரீகத்தைப் பர்மா தேசம் எவ்வளவு காலத் திற்கு முன் எப்படிக் கண்டு கொண்டது என்றே பிரமிக்க நேரிடும். வெளிப் பார்வைக்குப் பங்களா மாதிரியும், கோபுர

மாகவும், தோற்றும். அம்மண்டபத்தினுள்ளே நுழையின் உப்பரிகைக்கு அட்டை போட்டு ஒட்டு வேலை செய்து காகிதங்களால் அலங்கரித்திருப்பது போல் மண்டபத்தின் மேலே நவரத்தினங்கள் போல் பளிங்குக் கண்ணாடிகளால் சித்திர வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இத்தேசம் போல் கோவில்களின் உட்பாகம் கரி பிடித்தும் புகையேறியும் இராமல் இமை மூடாது பார்த்துக் கொண்டே ஆனந்திக்க நேரிடும். மண்டப வேலைகளைப் பார்த்தால் காகிதத்தில் செய்யப்பட்டு இருப்பதாக எண்ண வேண்டிவருமே யன்றி மரத்தினால் செய்ததாகத் தோன்ருது. சில சிருங்கார மண்டபங்களின் வாசல்படி, கோபுரம், முதலியவைகள் கருங்கல்லினால் மிகவும் அழகாகச் செய்யப்பட்டிருக்கின்றன. தூரத்துப் பார்வைக்கு மர வேலை என்று எண்ண வேண்டியிருக்கும். கோவிலுக்குள் முனிவர்கள் போன்ற சிலைகள் சலவைக் கல்லினாற் செய்யப்பட்டு பார்வைக்கு மிகவும் பெரிதாகப் பூதங்கள் போன்ற அளவில் அமைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். சில மண்டபங்களில் ஒன்றிரண்டு சிலைகளும் சிலவற்றில் அதிகமாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் பயப்படத்தக்க கோர உருவத்தோடிருக்கவில்லை. அக்கோவிலின் மத்தியில் ஒரு மண்டபத்தில் ஸ்ரீ ரெங்கனாத சயனம் போன்ற "நாகசயனம்" பண்ணிக் கொண்டிருக்கிற பாவனை தோற்றுகின்றது. நாகமும் ஸ்ரீரெங்கநாதர் சிலையும் மிகப் பெரிய உருவமாகவே இருக்கின்றன. கோவிலோ என்பதை கௌதமரிஷி ஆதீனமாம். அவரே பர்மாக்காரர்கள் கொண்டாடும் தெய்வமாம். நடுவில் ஒரு சிறு கட்டடத்தில் நாற்புறமும் ஜன்னல் போல் இரும்புக் கம்பிகளால் அடைத்துப் பிரார்த்தனைக்காரர்கள் செலுத்தின . வெள்ளி தங்கச் சாமான்கள் அதாவது கோவில், கப்பல்கள், ஓடங்கள், ஆயுதங்கள் இவைகள் போலவும் வெள்ளியினாலும் தங்கத்தி

ஞலும் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குள் ஒவ்வொரு வரும் போய்ப் பார்வையிடலாம். ஆனால் தகுந்த பந்தோபஸ்தும் செய்யப்பட்டிருக்கின்றன.

கோயிலின் மத்தியில் அடிப்படை வட்டமாக ஆரம்பிக்கப்பட்டு அதில் ஒரு பனை மரவுயரப் ஒரு ஸ்தம்பம் எழுப்பி இருக்கிறார்கள். இதுதான் கோவிலாம். வேறு துவஜ ஸ்தம்பங்கள் இல்லை.

கோவிலுக்குள்ளும் நூற்றுக்குமேல் சிறிய கடைகள் பர்மாக்கார ஸ்திரீகளால் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள் பெரும்பாலும் புஷ்பக் கடைகள், மெழுகுவர்த்திக் கடைகள், வெற்றிலை, பாக்கு, சுருட்டு, சோடா, லெமினெட், படங்கள், கண்ணாடிச் சாமான்கள், பிஸ்கோத்துகள், சிற்றுண்டிகள், இன்னும் பலவித வேடிக்கைப் பொருள்கள் வைத்து வெகுவாய் வியாபாரம் செய்யப்படுகின்றன. கோவிலுக்குள் போகும் வழிகளிலும் இப்படியே அநேக கடைகள் இரு பக்கங்களிலும் வைத்து பர்மாக்கார ஸ்திரீகளால் வியாபாரம் பண்ணப்பட்டு வருகின்றது. இத்தனை கடைகளுக்கும் தினசரி நல்ல வியாபாரமாகிறது. சிறு மெழுகுவர்த்தியும் பற்பல நிறமுள்ள புஷ்பங்களும்தான் ஸ்வாமிக்குப் பிரார்த்தனைக்கு வாங்கப்படுகின்றன. சிறு மெழுகுவர்த்தி கட்டு ஒன்றுக்கு (8 வர்த்திகளடங்கியது) ஒன்பது தம்படிதான். அந்த விலைக்கு விற்கப்படும் மெழுகுவர்த்திகள் மட்டும் ரூபா 100க்கு மேல் தினசரி விற்பனையாகின்றனவாம். ஒரு கோவில் பிரார்த்தனைக்கும் கொளுத்தி வைக்கும் மெழுகுவர்த்தி 100 ரூபாய்க்கு அதிகம் தினந்தோறுமாகும் என்றால், வந்து போகும் ஜனங்களின் சங்கியைத் தனியே காட்ட வேண்டியதில்லை.

கோவிலின் மேலிருந்து தரையை உற்றுநோக்கினால் வெகு ஆழமாகக் காணப்படுகிறது. அடிவாரத்தில் டிராம் வண்டி

வாடகை வண்டிகள் கிடைக்கின்றன. கோவிலைச் சுற்றிப் பார்க்க ஒரு ஜாம நேரமாவது சாவகாசம் வேண்டும். பகல் பொழுதில் ஒவ்வொரு ஸந்நிதியிலும் பிரார்த்தனைக்காரர்கள் செலுத்தின சிறு மெழுகுவர்த்திகள் நூற்றுக்கணக்காக எரிந்து கொண்டிருக்கும். பிரார்த்தனை செலுத்தும் புஷ்பங்கள், ஜெண்டிப் பூ, கப்பு காலடிப்பூ, பல காட்டுப் புஷ்பங்கள், இங்கிலீஷ் செடிகளின் புஷ்பங்களுமேதான். நம் கோவில்கள் மாதிரி, மல்லிகை, முல்லை, ரோஜா புஷ்பங்கள் அங்கு கோவிலில் சாத்துவதைக் காணேம். அவைகள் அருமை போலும்.

—'சுதேசமித்திரன்'
18—1—1913

கள்ளையும் சூதையும் உன்னிடம் கேட்பவர்களுக்கு, "அவை இரண்டினாலும் மிகுந்த பாபமே வரும்; சிறிது நன்மை இருப்பதாகத் தோன்றினாலும் தீமைகள் நன்மையை விட மிகவும் அதிகம்" என்று சொல்லு.

—குர் ஆன்

சத்தியத்தைத் தவிர வேறு யாரிடமும் எனக்குப் பக்தி இல்லை. சத்தியத்தைத் தவிர வேறு எந்தக் கட்டுப்பாட்டுக்கும் நான் உட்படுவதில்லை.

—காந்தியடிகள்

உலகத்தில் வெகு சிலரே தனியாக வாழத் தகுதியுடையவர். அவர்களுக்கு உலகத்தின் மாயையை அறியப் போதுமான லெளகிக ஞானமும், சகல மாயையையும் வெறுத்துத் தள்ளப் போதுமான அறவொழுக்கமும் இருக்க வேண்டும்.

—லெளவி

—:o:—

கடல் அலையிலிருந்து மின்சாரம்

நமது அவசிய தேவைக்கு இயற்கையைப் பயன்படுத்திக் கொள்வதில் மேலும் ஒரு அடி எடுத்துவைத்துள்ளனர் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள். இரண்டு பிரிட்டிஷ் பொறியியல் நிறுவனங்கள் கூட்டாகச் சேர்ந்து கடல் அலையின் வீழ்ச்சியிலிருந்து மின்சக்தி தயாரிக்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளன. எங்கு கடல் அலைகள் அதிக உயரம் எழும்பி விழுகின்றனவோ அந்த இடம் இத்தகைய கூடம் அமைக்க மிக ஏற்ற இடமாகும். தென்மேற்கு இங்கிலாந்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அலைகள் சுமார் 50 அடி உயரம் வரை எழுகின்றன. அந்த இடத்தை இந்தக் கூடம் அமைக்க ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

"இரண்டு பேசின் திட்டம்" என்ற இத்திட்டப்படி, அலை அதிகம் எழுகின்ற இடத்தில் ஒரு பேசினும், தாழ்வான இடத்தில் மற்றொரு பேசினுமாக அமைக்கிறார்கள். இரண்டிற்கும் இடையில் சிறிய அணைக்கட்டு ஒன்றை எழுப்பி, அதில் சுமார் 175 ஜெனரேட்டர்களை வைக்கிறார்கள்.

அலை எழுந்து மேல் பேசினை நிரப்பி, பிறகு அணை வழியே வழிந்து கீழ் பேசினை அடைவதற்குள் இடையில் இந்த ஜெனரேட்டர்கள் இயங்கி மின் உற்பத்தி செய்கின்றன. நாள் பூராவும்—24 மணி நேரமும்—இந்த முறைப்படி மின் உற்பத்தி செய்ய முடியும். ஆண்டு ஒன்றுக்கு பல ஆயிரம் கோடி கிலோவாட் மின்சக்தியை இந்த வகையில் உற்பத்தி செய்யலாம்.

இப்போது மிகவும் சிக்கனமாகக் கருதப்படும் அணுசக்தி முறை மின்சாரத்தைவிடவும் மேலும் சிக்கனமாக—மலி

வாக—இந்தப் புதிய முறையில் மின்சக்தி உற்பத்தி செய்ய முடியும். மின் உற்பத்தி மலிவு என்பது மட்டுமின்றி இந்தத் திட்டம் ஒரு வகையில் வெள்ளப் தடுப்பாகவும் அமைகிறது.

நாளடைவில் தண்ணீர் பரப்பு உள்ளடங்கி நிலப்பரப்பு கூடுதலாவதும் இதில் சாத்தியம். பிரிட்டன் போன்ற நிலப்பரப்பு குறைவான நாடுகள், தங்கள் பரப்பளவை குறைந்த அளவிலாவது விஸ்தரிக்க முடியுமென்றால் அது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இவை இந்த புதிய முறையின் குறிப்பிடத்தக்க நன்மைகளில் சில.

Statement about ownership and other particulars about Newspaper.

KUMARI MALAR

FORM IV

1.	Place of Publication	Madras
2.	Periodicity	Monthly
3.	Printer, Publisher & Editors' Name	A. K. CHETTIAR
	Nationality	Indian
	Address	Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18.
4.	Name and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.	A. K. CHETTIAR, Sole-Proprietor.

I, A. K. CHETTIAR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

A. K. CHETTIAR,
Publisher.

Date: 1—3—1971

கொய்த மலர்கள்

மதத்தின் முன்னிலையில் எல்லா மனிதர்களும் சமமான வர்களே. கல்வி, அறிவு அல்லது செல்வம் உள்ள ஒருவர், இவற்றைப் பெற்றிராத மற்றவர்களைவிடத் தாம் உயர்ந்தவர் என்று உரிமை கொண்டாட முடியாது.

—காந்தியடிகள்

ஒருவன் குற்றம் செய்தால் அதனால் வரும் கேடு அவனுடையதே. ஒருவேளை அவன் குற்றமே செய்யாமலும் இருக்கலாம்.

—மார்கஸ் ஔரேலியஸ்

கடவுளை நோக்கி நிற்கும் ஆசையே பிரார்த்தனையின் தெளிவான லட்சியமாகும்.

—பிலிப்ஸ் புரூக்ஸ்

உண்மையில் பெருங்கடல் நம்மால் அறியப்படாமல் பரந்து கிடக்கின்றது. நாமோ, கடற்கரையில் விளையாடி, அங்கும் இங்கும் ஓடி, அழகான ஒரு சிப்பியையும், மெல்லிய ஒரு கடற் பாசியையும் கண்டு மகிழ்ந்து நிற்கும் சிறு குழந்தைகளைப் போல் இருக்கிறோம்.

—ஆவ்பரி

ஒருவன் தான் தவறு செய்வதை ஒப்புக்கொள்ள வெட்கப்படக் கூடாது. ஒப்புக்கொள்வதன் பொருள் என்ன? அவன் நேற்றைவிட இன்று அதிக அறிவு பெற்றிருக்கிறான் என்பதே.

—போப்

உவப்பான முறையில் பேசுவது போலவே, அடக்கத்

துடன் செவிமடுத்துக் கேட்பதும் உரையாடலில் முக்கிய மானது.

—ஆட்வெல்

உயிரோடு இருக்கையில் எதையும் கொடாமல், இறந்த பிறகு தர்மங்கள் செய்ய ஏற்பாடு செய்வது வடிகட்டிய சுய நலமாகும்.

—கோல்டன்

வருங்காலத்தைத் தெரிந்து கொள்வதில் எனக்கு விருப் பம் இல்லை. நிகழ் காலத்தைக் கவனித்துக் கொள்வதில் தான் எனக்கு அக்கறை. அடுத்து வரும் விநாடியைக்கூடக் கட்டுப்படுத்தும் சக்தியைக் கடவுள் எனக்கு வழங்கவில்லை.

—காந்தியடிகள்

குற்றம் செய்யும்பொழுது, குற்றம் செய்கிறோம் என்று உணரும் அறிவு போய்விட்டால், அதன்பின் உயிர் வாழ்வ தால் என்ன பயன்?

—மார்கஸ் ஔரேலியஸ்

ஒருவனுக்கு ஆகாரம் அளிப்பதைவிட அதை அவனே தேடிக்கொள்ள வழி காட்டுவதே முக்கியம். ஒருவனுக்கு உதவி செய்வதைவிட அவன் பிறர்க்கு உதவி செய்யக் கற்றுக் கொடுப்பதே நலம்.

—ஆவ்பரி

தத்துவ ஞானி போல் பேசுவதும் எழுதுவது எளிது; ஆனால் அறிவோடு நடப்பது—அங்குதான் கஷ்டம்!

—ரைவ ரோல்

நாளை செய்துகொள்ளக் கூடிய காரியம் எதையும் நான்

மற்ற எவரையும் செய்யச் சொல்லக்கூடாது என்று நான் எப்பொழுதும் நம்பி வருகின்றேன்.

—மாண்டெஸ்கியு

கீழே விழாதிருத்தல் நமக்குப் பெரிய பெருமையன்று. ஆனால் விழுந்த பொழுதெல்லாம் எழுந்திருத்தலே பெருமை.

—கன்பூஷியஸ்

உலகை ஆட்டி வைக்க விரும்புவன் முதலில் தன்னை இயக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

—சாக்ரடீஸ்

இந்த உலகில் மூன்று விதத் துறவுகள். அறிவையும் இன்பத்தையும் சமயத்துக்காக வெறுத்தால் சமயத் துறவு; அதிகாரத்துக்காக வெறுத்தால் போர்த் துறவு; பணத்துக்காக வெறுத்தால் பணத் துறவு. இந்தக் காலத்தில் காணப்படும் துறவு மூன்றாவதே.

—ரஸ்கின்

புகழை விரும்புபவன் பிறருடைய தாளாண்மையைத் தனக்குத் தாயகமாகக் கருதுகிறான்.

இன்பத்தை விழைபவன் புலன் நுகர்ச்சியையே தன் நன்மையாகக் கருதுகிறான்.

ஆனால், அறிவுள்ளவனோ தன்னுடைய முயற்சியையே தனக்குத் தாயகமாகக் கருதுகிறான்.

—மார்கஸ் ஒளரேலியஸ்

Edited, Printed and Published by A. K. CHETTIAR
at Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18.

கவுண்டர் & கம்பெனி

கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு

டாடா-மெர்சிடஸ்-பென்ஸ் டீசல் டிரக்,
ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்
விற்பனையாளர்கள்.

தலைமை ஆபீஸ் :
கூட்ஸ்ஷெட் ரோடு,
பொள்ளாச்சி.

கிளை ஆபீஸ் & ஷோரூம் :
7/69 ஜெயில் ரோடு,
கோயமுத்தூர்.

நமது லட்சியத்தின் நேர்மையிலும் நமது ஆயுதங்களின் தூய்மையிலும் எனக்கு நம்பிக்கை உண்டு. எங்கே முறைகள் தூய்மையாக இருக்கின்றனவோ, அங்கே கடவுள் தமது ஆசிகளுடன் பிரசன்னமாகிறார் என்பதில் சந்தேகம் இல்லை. அந்த இரண்டும் ஒன்று சேர்ந்துள்ள இடத்தில் தோல்விக்கு இடமே இல்லை.

—காந்தியடிகள்

No. 1506 அசோகா MILD SCENTED ASOKA நெ. 1506